**தினமலர்**

**விவசாயிகளுக்கு பாராட்டு விழா**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 11,2012,04:03 IST

தாண்டிக்குடி:தாண்டிக்குடி பாலமுருகன் அறக்கட்டளை மற்றும் மலை விவசாயிகள் சார்பில், மலைவாழை, ஆரஞ்சு பயிர்களுக்கான விருது பெற்றவர்களுக்கு பாராட்டு விழா நடந்தது.தமிழ்நாடு மலை வாழை கூட்டமைப்பின் தலைவர் சேகர்நாகராஜன் மற்றும் செயலர் வீரஅரசு ஆகியோருக்கு, டெல்லியில் நடந்த விழாவில், மத்திய வேளாண் அமைச்சகம் மூலம் விருது வழங்கி கவுரவிக்கப்பட்டது. இதற்கான பாராட்டு விழா, தாண்டிக்குடி பாலமுருகன் கோயில் அறக்கட்டளை தலைவர் மங்களராஜ் தலைமையில் நடந்தது. நினைவு பரிசு வழங்கப்பட்டது. செயலர் சண்முகம் முன்னிலை வகித்தார். நிர்வாகிகள் பொன்னுச்சாமி, பாலகிருஷ்ணன் உட்பட மூத்த உறுப்பினர்கள் பேசினர். ஒன்றிய கவுன்சிலர் தவசி, ஊராட்சி தலைவர் மரகதம், வனக்குழு தலைவர் இளங்கோவன், காபி பூச்சியியல் துறை விஞ்ஞானி ஸ்டீபன் டீ சாமுவேல் மற்றும் முன்னோடி மலைவாழ் விவசாயிகள் கலந்து கொண்டனர்.

**சன்ன நெல் ரூ. 16.80, மோட்டா ரூ. 16.30 வழங்கப்படுமா? விவசாயிகள் கோரிக்கை**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 11,2012,00:58 IST

கோபிசெட்டிபாளையம்: பருவ மழை பொய்த்ததால் பல்வேறு சிரமங்களுக்கு இடையே நெல் சாகுபடி செய்யப்பட்டுள்ளதால், ஒரு கிலோ சன்ன ரக நெல்லுக்கு , 16.80 ரூபாய், மோட்டா ரகத்துக்கு, 16.30 ரூபாய் வழங்க வேண்டும் என, விவசாயிகள் கோரியுள்ளனர்.

கோபி வட்டாரத்தில், பாரியூர், நஞ்சகவுண்டன்பாளையம், ஒத்தக்குதிரை, கள்ளிப்பட்டி, காசிப்பாளையம், கூகலூர், டி.என்.பாளையம், கணபதிபாளையம் உள்ளிட்ட, 15 ஆயிரம் ஏக்கரில் நெல் பயிரிடப்பட்டுள்ளது. இயந்திரங்கள் மூலம் அறுவடைப் பணி மும்முரமாக நடப்பதால் ஒரே நாளில் ஆயிரக்கணக்கான ஏக்கர் நெல் அறுவடை செய்யப்படுகிறது. நெல் கொள்முதல் நிலையம் திறப்பதில் தாமதம் ஏற்பட்டுள்ளதால், தடப்பள்ளி பாசனப் பகுதிகளில் அறுவடை செய்யப்பட்ட நெல், குவியல் குவியலாக வயல்களில் தேங்கிக் கிடக்கிறது. நடப்பாண்டு பருவமழை பொய்த்ததால் பல்வேறு சிரமங்களுக்கிடையே நெற்பயிரை விவசாயிகள் காப்பாற்றினர்.

விலைவாசி உயர்வால், சாகுபடிக்கான செலவு அதிகரித்ததால், நெல் விலையை உயர்த்தி வழங்க வேண்டும் என, விவசாயிகள் கோரியுள்ளனர். கொடிவேரி அணைக்கட்டுத் திட்டம் தடப்பள்ளி வாய்க்கால் முறைநீர் பாசன விவசாயிகள் சபை கூட்டம் கோபியில் நடந்தது. கூட்டத்தில், தடப்பள்ளி மற்றும் அரக்கன்கோட்டை பாசனப் பகுதிகளில் அறுவடை துவங்கி மும்முரமாக நடக்கிறது. அரசு அறிவித்த கொள்முதல் விலையை விட 65 கிலோ கொண்ட நான்கு மூட்டை நெல்( ஒரு பொதி) சந்தை நிலவரப்படி, 4,000 ரூபாய்க்கு விற்பனையாகிறது. பாசனப்பகுதியில், வெளி மாநில வியாபாரிகள், உள்ளூர் வியபாரிகளுடன் கூட்டணி அமைத்து நெல்லின் விலையை பொதி, 3,500 ரூபாய்க்குள் வாங்க முயற்சி செய்து வருகின்றனர். வெளிமாநிலங்களில் இருந்து கிலோ, 22 ரூபாய்க்கு நெல் கொண்டு வந்து, இங்கு அரிசி ஆலைகளுக்கு கொடுக்கும் சூழ்நிலையில், முதல் போகத்தில் விளைந்துள்ள ஏ.எஸ்.டி.,16, ஏ.டி.டி.,36, ஜே.13., போன்ற நெல் ரகம், 15 ரூபாய்க்கு கீழே வாங்க முயற்சிப்பதை கண்டிக்கிறோம். ஒரு பொதி நெல், 4,000 ரூபாய்க்கு கீழே வியாபாரிகள் கேட்டால், நெல் மூட்டைகளை விற்பனை செய்யாமல் இருப்பு வைக்க சங்கம் தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

முதல் போகத்தில் மழை இல்லாத காரணத்தால் நெல் விளைவிக்க மிகுந்த சிரமப்பட்ட விவசாயிகள், நெல் விலை குறைவால் வியாபாரிகளுக்கு இரையாக வேண்டிய சூழ்நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர். தற்போது, அரசின் நெல்லுக்கான ஆதார விலை சன்ன ரகத்துக்கு, 11.80 ரூபாய், மோட்டா ரகத்துக்கு, 11.30 ரூபாய் என இருப்பதால், அதை அடிப்படையாக வைத்து விலையை வியபாரிகள் குறைக்கின்றனர். தமிழக அரசு நெல்லுக்கான ஆதாரவிலையை சன்ன ரகத்துக்கு, 11.80 ரூபாயில் இருந்து, 16.80 ரூபாய் எனவும், மோட்டா ரகத்துக்கு, 11.30 ரூபாயில் இருந்து, 16.30 ரூபாய் என உயர்த்தி வழங்க வேண்டும். வியாபாரிகளின் சூழ்ச்சி வலையில் விவசாயிகள் விழுந்து விடாமல், ஒரு பொதி நெல், 4,000 ரூபாய்க்கு கீழே கொடுக்க கேட்டுக்கொள்வது என, முடிவு செய்யப்பட்டது. கூட்டத்தில், சங்க நிர்வாகி ரவீந்திரன் தலைமை வகித்தார். மாநிலச் செயலாளர் நஞ்சப்பன், துணைத்தலைவர் ரவீந்திரன், செயலாளர் விஜயகுமார், மாவட்ட உழவர் விவாத குழு செயலாளர் வெங்கடாசலபதி உள்பட பலர் கலந்து கொண்டனர்.

## கொள்முதல் விலை உயர்வால் மஞ்சள் சாகுபடி அதிகரிப்பு

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 11,2012,02:07 IST

தர்மபுரி: மஞ்சளுக்கான கொள்முதல் விலை உயர்ந்து வருவதால், தர்மபுரி மாவட்ட விவசாயிகள் மஞ்சள் நடவு செய்வதில் அதிகம் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

தர்மபுரி, பென்னாகரம், பாலக்கோடு, பாப்பிரெட்டிப்பட்டி, உள்பட மாவட்டம் முழுவதும், 25 ஆயிரம் ஹெக்டேர் வரை மஞ்சள் சாகுபடி செய்யப்பட்டது. மஞ்சளுக்கு சந்தையில், 2010-11ம்

ஆண்டில் குவிண்டால், 17ஆயிரத்து, 83 ரூபாய்க்கும், 2011-12ம் ஆண்டு தொடக்கத்தில், குவிண்டால், 11 ஆயிரம் ரூபாய்க்கும் விற்கப்பட்டது.
அதற்கடுத்த சில மாதங்களில், மஞ்சள் விலை கடுமையான சரிவை சந்தித்து குவிண்டால், 3,000 ரூபாய்க்கு விற்பனை ஆனது. சாகுபடி செலவை விட, மிகக்குறைந்த விலைக்கு மஞ்சள் விற்பனையானதால், விவசாயிகள் மத்தியில் கவலையும், கலக்கமும் ஏற்பட்டது.இதனால், தர்மபுரி மாவட்ட விவசாயிகள், சாகுபடி பரப்பளவை வெகுவாக குறைந்து வந்தனர். இந்நிலையில் மஞ்சள் குவிண்டாலுக்கு, 9,000 ரூபாய் விலை நிர்ணயம் செய்ய வேண்டும், என வேண்டுகோள் விடுத்தனர்.
கடந்த சில நாட்களாக, மஞ்சளுக்கு சந்தையில் விலை தொடர்ந்து ஏறுமுகத்தில் உள்ளதாலும், கோரிக்கையின் படி விலை நிர்ணயம் விரைவில் அரசு அறிவிக்கும் என்ற நம்பிக்கையும், விவசாயிகளுக்கு,ஏற்பட்டுள்ளது. தர்மபுரி மாவட்டத்தில், கடந்த சில நாட்களாக பெய்து வரும் தொடர் மழை காரணமாக, மஞ்சள் விவசாயிகள் கூடுதல் பரப்பளவில் மஞ்சள் நடவு செய்யும் பணியை தொடங்கியுள்ளனர்.தர்மபுரி மாவட்டத்தில் கடந்த மாதம் வரை, 15 ஆயிரம் ஹெக்டர் பரப்பளவில் மட்டும் விவசாயிகள் மஞ்சள் நடவு செய்திருந்தனர். மஞ்சள் விலை, உயர்வு, குறைந்த பட்ச விலை நிர்ணயம் உள்ளிட்ட காரணங்களால் மாவட்டத்தில் மேலும், 5,000 ஹெக்டேர் பரப்பளவில், விவசாயிகள் மஞ்சள் சாகுபடியை செய்து வருகின்றனர்.இதனால், மஞ்சள் சாகுபடி பரப்பளவு வழக்கமான அளவை நெருங்கியுள்ளது.

**விவசாய தொழிலாளர்கள் பற்றாக்குறைதீர்வு காண நாளை கிராம சபை கூட்டம்**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 11,2012,03:25 IST

மேட்டூர்: ஊரக வேலை திட்ட தொழிலாளர்களை, விவசாய பணிகளில் ஈடுபடுத்துவதற்காக, மாநிலம் முழுவதும், நாளை சிறப்பு கிராம சபை கூட்டம் நடத்தி, தீர்மானம் நிறைவேற்றப்படவுள்ளது.மத்திய அரசு, 2008ம் ஆண்டு, தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தை தமிழகத்தில் நடைமுறைப்படுத்தியது. தமிழகத்தில் உள்ள அனைத்து பஞ்சாயத்திலும், வறுமை கோட்டுக்கு கீழ் உள்ள குடும்பங்களில் தலா ஒருவருக்கு, 100 நாட்கள் வேலைவாய்ப்பு வழங்கப்படுகிறது.
ஆரம்பத்தில், 80 ரூபாயாக இருந்த ஒருநாள் வேலைக்கான கூலி தற்போது, 132 ரூபாயாக உயர்த்தி வழங்கப்படுகிறது.பஞ்சாயத்தில் உள்ள விவசாய தொழிலாளர்கள் அனைவரும் ஊரக வேலைக்கு சென்றதால், விவசாய பணிகளுக்கு கூலியாட்கள் கிடைக்கவில்லை. கூலியாட்கள் பற்றாக்குறையால், விவசாய நிலங்களில் சாகுபடி பணிகள் குறைந்தது. ஏராளமான நிலங்கள் தரிசாக மாறியது. உணவு உற்பத்தியும் பாதிக்கும் அபாயம் ஏற்பட்டது.எனவே, ஊரக வேலை

திட்ட தொழிலாளர்களை, விவசாய பணிக்கு பயன்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும், என விவசாயிகள் கோரிக்கை விடுத்தனர். அதை ஏற்று, ஊரக வேலை தொழிலாளர்களை, விவசாய வேலைகளுக்கு பயன்படுத்த, தமிழக அரசு முடிவு செய்துள்ளது.முதல்கட்டமாக, ஒவ்வொரு பஞ்சாயத்திலும் சிறு, குறு விவசாயிகள், எஸ்.சி., எஸ்.டி., விவசாயிகள் நிலங்கள் சீரமைப்பு, புதர் அகற்றுதல், நீர்பாசன வாய்க்கால் அமைத்தல், விதைப்புக்காக குழி தோண்டுதல் போன்ற பணிகளில் ஊரக வேலை தொழிலாளர்களை ஈடுபடுத்த திட்டமிடப்பட்டுள்ளது.
தமிழகத்தில் உள்ள அனைத்து பஞ்சாயத்துகளிலும் நாளை (12ம் தேதி) சிறப்பு கிராமசபா கூட்டம் நடத்தி, ஊரக வேலை திட்ட தொழிலாளர்களை விவசாய பணிகளில் ஈடுபடுத்துவது தொடர்பாக தீர்மானம் நிறைவேற்றப்படவுள்ளது.இதுகுறித்து விவசாயிகள் சிலர் கூறியதாவது:விளை நிலங்களில் நாற்று நடவு, களையெடுத்தல், அறுவடை செய்தல் போன்ற பணிகளுக்கே ஆட்கள் பற்றாக்குறை அதிகமாக உள்ளது. எனவே, நில சீரமைப்பு, புதர் அகற்றுதல் வாய்க்கல் சீரமைத்தல் மட்டுமின்றி, களை யெடுத்தல், அறுவடை செய்தல் போன்ற பணிகளுக்கும் ஊரக வேலை தொழிலாளர்களை பயன்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.இவ்வாறு அவர்கள் கூறினர்.

## முட்டை விலை 360 காசுநுகர்வோர் கடும் அதிருப்தி

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 11,2012,03:23 IST

நாமக்கல்: தமிழகம், கேரளாவில், முட்டை விலை, 360 காசுகளாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. முட்டை விலையின் தொடர் ஏற்றம், நுகர்வோர் மத்தியில் கடும் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது.நாமக்கல்லில், தேசிய முட்டை ஒருங்கிணைப்புக் குழு கூட்டம் நடந்தது. முட்டை உற்பத்தி, மார்க்கெட் நிலவரம் குறித்து, பண்ணையாளர்கள் விவாதித்தனர். அதையடுத்து, 354 காசுகளுக்கு விற்பனை செய்யப்பட்ட முட்டை ஆறு காசுகள் உயர்த்தி, 360 காசுகளாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.
முட்டை விலை, சில வாரங்களாக தொடர் ஏற்றம் கண்டு வருகிறது. இது, பண்ணையாளர்கள் மத்தியில் மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. எனினும், முட்டை விலை தொடர் ஏற்றம், நுகர்வோர் மத்தியில், கடும் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது.நாட்டின் பிற மண்டலங்களில் முட்டை விலை நிலவரம்:
சென்னை, 360 காசுகள், பெங்களூரு, 355காசுகள், மைசூரு, 352 காசுகள், ஹைதராபாத், 328 காசுகள், மும்பை, 360 காசுகள், விஜயவாடா, 328 காசுகள், கோல்கத்தா, 380 காசுகள், பார்வாலா, 343 காசுகள், டில்லி, 354 காசுகள்.இவ்வாறு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.நாமக்கல்லில் நேற்று நடந்த பண்ணையாளர், வியாபாரிகள் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில், முட்டைக் கோழி

விலை கிலோ, 49 ரூபாயாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. பல்லடத்தில் நடந்த கறிக்கோழி உற்பத்தியாளர் ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில், அதன் விலை கிலோ, 62 ரூபாயாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

## கிடா வெட்டி விருந்து வைத்தகம்பம் பள்ளத்தாக்கு விவசாயிகள்

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 11,2012,04:44 IST

கம்பம்:தேனி மாவட்டம் கம்பம் பள்ளத்தாக்கு விவசாயிகள் சங்கம் சார்பில்,அங்குள்ள சாமாண்டியம்மன் கோயிலில் கிடா வெட்டி விருந்து நடந்தது. ஏராளமான விவசாயிகள் இதில் பங்கேற்றனர். தென்மேற்கு பருவமழை ஏமாற்றியதால், அணையின் நீர் மட்டம் உயரவில்லை. இதனால் கம்பம் பள்ளத்தாக்கில், 14 ஆயிரத்து 707 ஏக்கரில் நெல் சாகுபடி பாதிக்கப்படும் அபாயம் எழுந்தது. கம்பம் நகரில் மட்டும், ஊற்று நீரை பயன்படுத்தி நடவு மேற்கொண்டனர். தற்போது மழை பெய்து, அணையின் நீர் மட்டம் 120 அடிக்கு உயர்ந்ததால், கம்பம் பள்ளத்தாக்கில் முதல் போக நடவு மேற்காள்ளப்பட்டு வருகிறது.மழை தொடர்ந்து பெய்யவும், முதல் போக உற்பத்தி நன்றாக இருக்கவும், இறைவனை வேண்டி, கம்பம் விவசாயிகள் கிடா வெட்டி விருந்திற்கு ஏற்பாடு செய்தனர். ஆங்கூர்பாளையத்தில் உள்ள சாமாண்டியம்மன் கோயிலில், 5 ஆட்டு கிடாக்களை வெட்டி விருந்து வைத்தனர்.விவசாய சங்க தலைவர் ஓ.ஆர். நாராயணன், நீரினை பயன்படுத்துவோர் சங்க செயலாளர் ராமகிருஷ்ணன் உள்ளிட்ட ஏராளமானோர் பங்கேற்றனர்.

## வறட்சி மாவட்டமாக அறிவிக்க கோரி பேரணி

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 11,2012,05:08 IST

அம்பாசமுத்திரம்: நெல்லை மாவட்டத்தை வறட்சி மாவட்டமாக அறிவிக்க கோரி தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தினர் அம்பாசமுத்திரத்தில் நேற்று, பேரணியாக சென்று துணை தாசில்தாரிடம் கோரிக்கை மனு அளித்தனர். நெல்லை மாவட்டத்தை வறட்சி மாவட்டமாக அறிவிக்க வேண்டும். விவசாயிகளுக்கு ஏக்கருக்கு 10 ஆயிரம் ரூபாய் நிவாரணம் வழங்க வேண்டும் என வலியுறுத்தி அம்பாசமுத்திரம் பஸ் ஸ்டாண்ட் அருகில் நேற்று காலை திரண்ட தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தினர், அங்கிருந்து பேரணியாக தாலுகா அலுவலகத்தை வந்தடைந்தது, துணை தாசில்தார் பாகவதி தங்கத்திடம் கோரிக்கை மனுவை வழங்கினர். இப்போராட்டத்திற்கு தமிழ்நாடு விவசாயிகள் சங்க நெல்லை மாவட்ட துணை தலைவர்

ராமகிருஷ்ணன் தலைமை வகித்தார். சேரன்மகாதேவி செயலாளர் சிவபாலன், அம்பாசமுத்திரம் செயலாளர் கணபதி, கடையம் செயலாளர் ஜெயராஜ், பாப்பாக்குடி செயலாளர் அப்பாத்துரை முன்னிலை வகித்தனர். மாவட்ட செயலாளர் வேலுமயில், மார்க்சிஸ்ட் கம்யூ., பாப்பாக்குடி ஒன்றிய செயலாளர் சந்திரசேகர், சி.ஐ.டி.யு., சுடலைமணி, வீரவநல்லூர் கணேசன் பேசினர். அம்பாசமுத்திரம், சேரன்மகாதேவி, கடையம், பாப்பாக்குடி ஒன்றியத்தை சேர்ந்த தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தினர் கலந்து கொண்டனர்.

**அரசின் விலையில்லா ஆடுகளை நோய் தாக்கு: பயனாளிகள் பெரும் கலக்கம்**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 11,2012,01:09 IST

ஆத்தூர்: ஆத்தூர் அருகே, ஈச்சம்பட்டி கிராமத்தில், அரசு வழங்கிய விலையில்லா ஆடுகளை, "வினோத' தோல் உரிப்பு நோய் தாக்கியுள்ளது. அதனால், பயனாளிகள் பெரும் கலக்கமடைந்துள்ளனர்.

தமிழக முதல்வர் ஜெயலலிதா, ஏழை குடும்பத்தினர் பயன்பெறும் வகையில், விலையில்லா கறவை மாடு மற்றும் தலா நான்கு ஆடுகள் வழங்கும் திட்டத்தை செயல்படுத்தினார். அதன்படி, சேலம் மாவட்டம், ஆத்தூர் அருகே, ஈச்சம்பட்டி கிராமத்தில், 43 பயனாளிகள், சொக்கநாதபுரத்தில், 47 பயனாளிகள், மல்லியக்கரையில், 13 பயனாளிகள் என, 103 பயனாளிகளுக்கு, தலா நான்கு ஆடுகள் வீதம், மொத்தம், 412 ஆடுகள் வழங்கப்பட்டுள்ளது. இதில், ஈச்சம்பட்டி கிராமத்தில், அம்பிகா, கரும்பாயி, வள்ளி ஆகியோருக்கு வழங்கப்பட்ட விலையில்லா ஆடுகளில், மூன்று ஆடுகள் கழிச்சல் நோயால், அடுத்தடுத்து உயிரிழந்துள்ளது. தவிர, 50க்கும் மேற்பட்ட ஆடுகளுக்கு, "ஆட்டு அம்மை' நோய் தாக்கியுள்ளது. இந்நோய் தாக்கம் ஏற்பட்ட ஆடுகளின் வாய் பகுதியில், கொத்தமல்லி அளவில் கொப்பளங்களும், புண்களும் காணப்படுகிறது. அதனால், அம்மை நோய் தாக்கிய ஆடுகள், சரிவர தீவனம் எடுத்துக் கொள்ளாததால், உடல் எடை குறைந்து வருகிறது. இந்த ஆடுகளை, மல்லியக்கரை, கால்நடை மருந்தகத்துக்கு கொண்டு சென்று, மருத்துவ சிகிச்சை பெற்று வருகின்றனர். அதில், பொன்மணி என்பவருக்கு வழங்கப்பட்ட விலையில்லா நான்கு ஆடுகளில், ஒரு ஆட்டிற்கு, தலை மற்றும் உடல் பகுதியில், ரத்த காயங்களும், தோல் உரிந்து வருகிறது. இந்த தோல் உரிப்பு நோய்க்கு, மருத்துவ சிகிச்சை அளித்தும் நோய் குணமடையாமல் உள்ளதாக, புகார் எழுந்துள்ளது. ஈச்சம்பட்டி கிராமத்தில், கழிச்சல் நோய் தாக்கம் காரணமாக, மூன்று ஆடுகள் இறந்து வருவதும், "வினோத' தோல் உரிப்பு நோய் மற்றும் ஆட்டு அம்மை நோயால், பயனாளிகள் பெரும் கலக்கம் அடைந்துள்ளனர்.

இதுகுறித்து, ஈச்சம்பட்டியை சேர்ந்த பயனாளி ஒருவர் கூறியதாவது: ஈச்சம்பட்டி கிராமத்தில், 43 பயனாளிகளுக்கு, 172 ஆடுகள் வழங்கப்பட்டன. கழிச்சல் நோய் தாக்கத்துக்குள்ளான ஆடு இறந்தது. அதேபோல், மூன்று ஆடுகள், கழிச்சல் நோயில் இறந்துள்ளது. 50க்கும் மேற்பட்ட ஆடுகளுக்கு, வாயில் கொப்பளம், புண் ஏற்பட்டும், ஒரு ஆட்டுக்கு, தோல் உரிப்பு நோய் வந்துள்ளது. அரசு வழங்கிய விலையில்லா ஆடுகளுக்கு, நோய் தாக்கம் ஏற்பட்டுள்ளதால், மேய்ச்சலுக்கு கொண்டு செல்லாமல், கால்நடை மருந்தகத்துக்கு சென்று, மருத்துவ சிகிச்சை அளித்தாலும் குணமடையவில்லை. இவ்வாறு கூறினார்.

இதுகுறித்து, மல்லியக்கரை கால்நடை மருந்தக டாக்டர் கீதா கூறியதாவது: ஈச்சம்பட்டி கிராமத்தில், அலர்ஜி காரணமாக, ஒரு ஆட்டுக்கு தோல் உரிப்பு நோய் வந்துள்ளது. அந்த ஆட்டுக்கு, மருத்துவ சிகிச்சை வழங்குகிறோம். அவ்வப்போது, பெய்து வரும் மழையில், வளரும் புற்களில் விடுவதும், அரிசி மற்றும் சாப்பாடு கொடுப்பதால், மூன்று ஆடுகள், கழிச்சல் நோயால் இறந்துள்ளது. ஒவ்வொரு வாரம், சனிக்கிழமையில், விலையில்லா ஆடுகளுக்கு நோய் தாக்கம் குறித்து, ஆய்வு செய்து, மருத்துவ சிகிச்சை அளிக்கப்படுகிறது. இவ்வாறு அவர் கூறினார்.

**விவசாயிகள் கருத்து கேட்பு கூட்டத்தில்கைகலப்பு**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 11,2012,03:27 IST

திருவண்ணாமலை: கரும்பு விவசாயிகள் பிரச்னைகள் குறித்து, கருத்து கேட்பதற்காக நடந்த கூட்டத்தில், விவசாயிகளிடையே மோதல் ஏற்பட்டது. அதிர்ச்சி அடைந்த கலெக்டர் விஜய்பிங்ளே, கூட்டத்தை விட்டு வெளியேறினார்.திருவண்ணாமலை, கலெக்டர் அலுவலகத்தில் கரும்பு விவசாயிகள் சர்க்கரை ஆலைகளிடமிருந்து கூலி சலுகை பெறுதல், எல்லை வரையறை, உள்ளிட்ட தொடர்பான ஆலோசனை கூட்டம் கலெக்டர் விஜய்பிங்ளே முன்னிலையில், நேற்று மாலை நடந்தது.

கூட்டத்தில், டி.ஆர்.ஓ. வளர்மதி, வேளாண் இணை இயக்குனர் சக்கரவர்த்தி, விவசாய சங்க பிரதிநிதிகள் மற்றும் விவசாயிகள் கலந்து கொண்டனர்.கூட்டத்தில், சர்க்கரை ஆலைகளால் ஏற்படும் பிரச்னைகள் குறித்து விவசாயிகள், கலெக்டர் விஜய்பிங்ளேவிடம் கூறினர், அப்போது, வெட்டுக்கூலி சரிவர வழங்குவதில்லை, குறித்த காலத்தில் கரும்புக்கு பணம் பட்டுவாடா செய்வதில்லை. கடன் வழங்கும் போது, இன்சூரன்ஸ் பணம் பிடித்தம் செய்கின்றனர். பூச்சிகளால் தாக்கி அழியும் போது, வங்கி நிர்வாகம் இன்சூரன்ஸ் வழங்குவதில்லை. ஆலை நிர்வாகத்தினர் எடை போடுவதில் குறைவாக உள்ளது, எனவே கரும்புகளை வெளியிலிருந்து எடை போட்டு வந்தால், அந்த அளவை ஏற்று கொள்ள வேண்டும் என்பது, உள்ளிட்ட பல்வேறு கருத்துகள்

விவாதிக்கப்பட்டன.அப்போது துரிஞ்சாபுரம் ஒன்றியம், கார்குணம் கிராமம், தரணி சர்க்கரை ஆலைக்கு கரும்பு வெட்டி அனுப்புவதற்கு எல்லை வரையறுக்கப்பட்டுள்ளது. அப்பகுதியை சேர்ந்த, 10க்கும் மேற்பட்ட விவசாயிகள் தரணி சர்க்கரை ஆலை நிர்வாகத்திலிருந்து விடுவித்து, சாத்தனூர் அருகே உள்ள பண்ணாரி சர்க்கரை ஆலைக்கு கரும்பு வெட்டி அனுப்புவதற்கு அனுமதி வழங்க வேண்டும், எனக் கோரினர்.

அப்போது, அதே கிராமத்தை சேர்ந்த சந்திரசேகர் என்பவர், பண்ணாரி சர்க்கரை ஆலை, 20 கிலோ மீட்டர் தூரம் கூடுதலாக உள்ளது, எனவே, தரணி சர்க்கரை ஆலை நிர்வாகத்திலேயே இருக்க வேண்டும், என்று கூறினார். அதனால், ஒரே கிராமத்தை சேர்ந்த விவசாயிகளிடையே கருத்து வேறுபாடு ஏற்பட்டு, சந்திரசேகரை தாக்கினர். இதனால் அதிர்ச்சி அடைந்த கலெக்டர், கூட்டத்தை விட்டு வெளியேறினார்.விவசாயிகள் கூட்டத்தில் கலந்து கொண்ட மற்ற விவசாயிகள், அவர்களை சமாதானம் செய்தனர். 15 நிமிடம் கழித்து மீண்டும், கலெக்டர் விஜய்பிங்ளே கூட்டத்தில் கலந்து கொண்டு கூட்டத்தை நடத்தி முடித்தார்.

நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
தினமணி
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

# ரூ.37 கோடியில் நவீன சேமிப்பு- குளிர்பதனக் கிடங்குகள்: ஜெயலலிதா

First Published : 11 Sep 2012 01:32:58 AM IST



சென்னை, செப். 10: தமிழகத்தில் 18 நவீன சேமிப்புக் கிடங்குகள் மற்றும் 50 குளிர்பதனக் கிடங்குகள் ரூ.37.50 கோடியில் அமைக்க முதல்வர் ஜெயலலிதா உத்தரவிட்டுள்ளார்.

இது குறித்து தமிழக அரசு திங்கள்கிழமை வெளியிட்ட அறிவிப்பு:

விவசாயிகள் தங்களின் விளை பொருள்களை பாதுகாப்பாக இருப்பில் வைத்து, அவற்றை நல்ல விலைக்கு விற்பனை செய்யும் வகையிலும், உழைப்பின் பலன் உழவர்களுக்கு முழுமையாகக் கிடைக்க வேண்டும் என்ற நோக்கத்துடனும், எடைபோடும் இயந்திரங்கள், எடை மேடைகள், ஈரப்பதமானி போன்ற வசதிகளுடன்கூடிய 18 நவீன சேமிப்புக் கிடங்குகள் மற்றும் 50 குளிர்பதனக் கிடங்குகள் ஆகியவற்றை ரூ.37.50 கோடியில் அமைக்க முதல்வர் ஜெயலலிதா உத்தரவிட்டுள்ளார்.

தமிழகத்திலுள்ள பெரும்பாலான சிறு மற்றும் குறு விவசாயிகள் பயிர்க் கடனை திருப்பிச் செலுத்த வேண்டும் என்ற எண்ணத்திலும், விளைபொருள்களை நீண்ட நாள்களாக பாதுகாப்பாக வைத்திருக்க முடியாது என்பதாலும் அறுவடை முடிந்தவுடன் கிடைத்த விலைக்கு தங்கள் விளை பொருள்களை விற்கின்றனர்.

நவீன சேமிப்புக் கிடங்குகள்: இந்தச் சூழ்நிலையில், நவீன சேமிப்புக் கிடங்குகள் அமைக்கப்படுவது அவசியமாகும். அதன்படி, 2 ஆயிரம் மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட 18 நவீன சேமிப்புக் கிடங்குகள் ஒவ்வொன்றும் ரூ.1.20 கோடி மதிப்பில், ரூ.21.60 கோடியில் அமைக்கப்படும்.

திருவண்ணாமலை மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட 18 நவீன சேமிப்புக் கிடங்குகள், ஒவ்வொன்றும் 1 கோடியே 20 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில், 21.60 கோடி ரூபாய் செலவில், ஆரணி மற்றும் தேசூர் (திருவண்ணாமலை) ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள் வெள்ளக்கோவில், அலங்கியம் மற்றும் மூலனூர் (ஈரோடு) ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள் கலவை ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் (வேலூர்)  அவலூர் பேட்டை மற்றும் திண்டிவனம் (விழுப்புரம்) ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள்  குத்தாலம் ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் (நாகப்பட்டினம்), தேவக்கோட்டை ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் (ராமநாதபுரம்), செஞ்சேரி மற்றும் ஆனைமலை (கோவை) ஒழுங்குமுறை விற்பனை கூடங்கள்,  ஊத்தங்கரை (தருமபுரி) ஒழுங்குமுறை விற்பனை கூடம், சின்னமனூர் ஒழுங்கு முறை விற்பனைக் கூடம் (தேனி), மன்னார்குடி (திருவாரூர்) ஒழுங்குமுறை விற்பனைக் கூடம், பெரம்பலூர் (திருச்சி) ஒழுங்குமுறை விற்பனைக் கூடம், காட்டுமன்னார்கோவில் மற்றும் குறிஞ்சிபாடி (கடலூர்) ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள் ஆகிய 18 இடங்களில் ஊரக சேமிப்புக் கிடங்குகள் கட்ட முதல்வர் ஜெயலலிதா உத்தரவிட்டுள்ளார்.

குளிர்பதனக் கிடங்குகள்: இதேபோன்று, 25 மெட்ரிக் டன் கொள்ளவில், குளிர்பதன  கிடங்கு ஒன்றிற்கு ரூ.31.80 லட்சத்தில், ரூ.15.90 கோடி செலவில், செங்கம், போளூர், திருவண்ணாமலை (திருவண்ணாமலை) ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள், கடலூர் விற்பனைக் கூடம், சத்தியமங்கலம், கொடுமுடி, அந்தியூர், பூஞ்சம்புளியம்பட்டி (ஈரோடு) ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள், வேலூர், திருப்பத்தூர் மற்றும் வாணியம்பாடி (வேலூர்) ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்கள், பெரம்பலூர், மற்றும் கரூர் (திருச்சி) ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள், செஞ்சேரி, ஆனைமலை, அவினாசி, அன்னூர், தொண்டாமுத்தூர் மற்றும் உடுமலைப்பேட்டை (கோவை) ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள், விழுப்புரம் மற்றும் உளுந்தூர்பேட்டை (விழுப்புரம்) ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள்,  அரூர், பென்னாகரம், போச்சம்பள்ளி மற்றும் ஊத்தங்கரை (தருமபுரி) ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள், ராஜபாளையம், அருப்புக்கோட்டை, சிங்கம்புனேரி, மற்றும் கமுதி (ராமநாதபுரம்) ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள், ஆத்தூர், நாமகிரிப்பேட்டை, திருச்செங்கோடு, பரமத்தி வேலூர், கெங்கவல்லி மற்றும் சேலம் (சேலம்) ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள், பழனி, திண்டுக்கல் மற்றும் கோபால்பட்டி (திண்டுக்கல்) ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள், திங்கள்சந்தை (கன்னியாகுமரி) ஒழுங்குமுறை விற்பனைக் கூடம், தஞ்சாவூர் ஒழுங்குமுறை விற்பனைக் கூடம், தேனி மற்றும் கம்பம் ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள், திருமங்கலம் (மதுரை) ஒழுங்குமுறை விற்பனைக் கூடம், தூத்துக்குடி, திருநெல்வேலி, வள்ளியூர், கோவில்பட்டி, எட்டையபுரம், தென்காசி ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள் மற்றும் ஆலங்குடி (புதுக்கோட்டை) ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் ஆகிய 50 இடங்களில் குளிர்பதனக் கிடங்குகள் அமைக்கப்படும் என்று தமிழக அரசின் அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தேசிய உணவுப் பதப்படுத்தும் இயக்கம் நடப்பாண்டு முதல் செயல்படுத்தப்படும்: முதல்வர்
First Published : 11 Sep 2012 01:34:24 AM IST



சென்னை, செப். 10: தேசிய உணவுப் பதப்படுத்தும் இயக்கத்தினை நடப்பாண்டு (2012-2013) முதல் தமிழகத்தில் செயல்படுத்த முதல்வர் ஜெயலலிதா உத்தரவிட்டுள்ளார்.
இது குறித்து தமிழக அரசு திங்கள்கிழமை வெளியிட்ட அறிவிப்பு:
உணவுப் பதப்படுத்துவதன் முக்கியத்துவத்தை அறியும் வகையில் உற்பத்தியைப் பெருக்கி நாட்டிலுள்ள விவசாயிகளின் வருமானத்தை அதிகரித்தல், மாநிலத்தின் வேளாண் திட்டங்களுக்கும், உணவுப் பதப்படுத்தும் தொழில் பிரிவின் வளர்ச்சிக்கும் உதவிடுதல், மாநில அரசு நிறுவனங்குக்கும் மதிப்புக் கூட்டுதலுக்கான உள்கட்டமைப்புகளுக்கும் உள்ள இடைவெளியைக் குறைப்பதன் மூலம் வேளாண் விளைபொருள்களின் தேவையை அதிகரித்தல், அறுவடை பின்செய் தொழில்நுட்ப மேலாண் மற்றும் உணவுப் பதப்படுத்தும் தொழில்களில் தொழில்முனைவோருக்கு பயிற்சி அளித்து அவர்களின் தரத்தை மேம்படுத்துதல், உணவுப் பதப்படுத்தும் தொழிற்சாலைக்கு உள்நாடு மற்றும் வெளிநாட்டு சந்தைக்கேற்ப உணவுப் பாதுகாப்பு சட்டத்தின் தரத்துக்கும், சந்தை தேவைக்கும் உதவி செய்தல் அவசியமாகும்.
இந்த நோக்கங்களின் அடிப்படையில் தமிழகத்தில் நடப்பு நிதியாண்டு (2012-2013) முதல் தேசிய உணவுப் பதப்படுத்தும் இயக்கத்தினை செயல்படுத்த முதல்வர் ஜெயலலிதா உத்தரவிட்டுள்ளார்.
இந்த இயக்கத்தின் திட்டங்களை தமிழகத்தில் செயல்படுத்த வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறை, மாநில ஒருங்கிணைப்பு முகமையாக செயல்படும். அந்தத் துறையின் ஆணையரை இந்த தேசிய உணவுப் பதப்படுத்தும் இயக்கத்தின் இயக்குநராக நியமனம் செய்யவும் முதல்வர் ஜெயலலிதா உத்தரவிட்டுள்ளார்.
இந்த இயக்கத்தின் நிர்வாகத்தை வலுப்படுத்துதல், தொலைநோக்குத் திட்டத்தினை தயாரித்தல் மற்றும் இந்த இயக்கம் பற்றி மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்துதல் போன்ற பணிகளுக்காக செலவிடப்படும் ரூ.1.50 கோடியில் மாநில அரசின் பங்களிப்பாக ரூ.37.50 லட்சத்தை வழங்கவும் முதல்வர் உத்தரவிட்டுள்ளார்.
இந்த இயக்கத்தின் திட்டங்களை செயல்படுத்த, மாநில மற்றும் மாவட்ட அளவிலான பொதுக்குழு, மாநில அளவில் அதிகாரம் பெற்ற குழு, திட்ட கூர்ந்தாய்வுக் குழு, திட்ட ஒப்புதல்

குழு மற்றும் மாவட்ட உணவு பதப்படுத்தும் இயக்கக் குழு ஆகிய குழுக்கள் அமைக்கப்படும் என்று தமிழக அரசின் அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

80 அடியைத் தொட்டது மேட்டூர் நீர்மட்டம்

First Published : 11 Sep 2012 01:23:21 AM IST



நீர்மட்டம் 79.92 அடியாக உயர்ந்து காணப்பட்ட மேட்டூர் அணை.

மேட்டூர், செப். 10: மேட்டூர் அணையின் நீர்மட்டம் 15 நாள்களில் 3.46 அடி அதிகரித்துள்ளது. இதையடுத்து, நீர்மட்டம் 80 அடியை நெருங்குகிறது.

கர்நாடகத்தில் காவிரி நீர்ப்பிடிப்பு பகுதிகளில் பெய்து வரும் தொடர் மழையால், அங்குள்ள அணைகளில் இருந்து தண்ணீர் திறந்துவிடப்பட்டுள்ளது.

இதையடுத்து, மேட்டூர் அணைக்கு நீர்வரத்து அதிகரித்தது. கடந்த 28-ம் தேதி மாலை 76.28 அடியாக இருந்த மேட்டூர் அணையின் நீர்மட்டம் திங்கள்கிழமை (செப்டம்பர் 10) மாலை 79.92 அடியாக உயர்ந்தது. 13 நாள்களில் அணையின் நீர்மட்டம் 3.64 அடி உயர்ந்துள்ளது. கடந்த ஒருவாரமாக அணைக்கு வரும் நீரின் அளவு வினாடிக்கு 8 ஆயிரம் கனஅடிக்குக் குறையாமல் சீராக வந்து கொண்டிருக்கிறது.

நீர்வரத்து இதே அளவில் இருந்தால், அணை திறக்கப்படும் நாளான வருகிற 17-ம் தேதிக்குள் நீர்மட்டம் மேலும் 4 அடி உயரும் வாய்ப்பு உள்ளது என்று பொதுப் பணித் துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

காவிரி: தமிழகத்துக்கு கூடுதலாக வினாடிக்கு 2,500 கன அடி நீர்

First Published : 11 Sep 2012 03:20:57 AM IST

புது தில்லி, செப். 10: காவிரி நதியில் இருந்து தமிழகத்துக்குத் தற்போது கிடைத்து வரும் வினாடிக்கு 7500 கன அடி நீருடன் கூடுதலாக நாள்தோறும் வினாடிக்கு 2500 கன அடி நீரை செப்டம்பர் 12 முதல் 20-ம் தேதி வரை திறந்து விட கர்நாடகம் ஒப்புக் கொண்டுள்ளது. இதனால், காவிரியில் இருந்து தமிழகத்துக்கு வினாடிக்கு 10 ஆயிரம் கன அடி நீர் தாற்காலிகமாகக் கிடைக்கும்.

÷தமிழகத்தில் சம்பா சாகுபடிக்காக காவிரி நதியில் இருந்து தினமும் 2 டி.எம்.சி. நீரைத் திறந்து விட வேண்டும் என்று தமிழக அரசு கடந்த வாரம் உச்ச நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்திருந்தது. இதன் மீதான விசாரணை நீதிபதிகள் டி.கே.ஜெயின், மதன் பி.லோகுர் அடங்கிய அமர்வு முன்னிலையில் திங்கள்கிழமை நடைபெற்றது. அப்போது தமிழக அரசு சார்பில் ஆஜரான வழக்குரைஞர் சி.எஸ்.வைத்தியநாதன் முன்வைத்த வாதம்:

÷மேட்டூர்

அணையில் போதுமான நீர் வரத்து இல்லை. தமிழக விவசாயிகளின் நலன் கருதி தமிழகத்துக்கு நாள்தோறும் 2 டி.எம்.சி. நீரைத் திறந்து விட கர்நாடகத்துக்கு உச்ச நீதிமன்றம் உத்தரவிட வேண்டும் என்று வைத்தியநாதன் கோரினார். இதையடுத்து, கர்நாடக அரசு சார்பில் ஆஜரான வழக்குரைஞர் அனில் திவான், ""ஏற்கெனவே காவிரியில் இருந்து நாள்தோறும் வினாடிக்கு 7500 கன அடி நீர் தமிழகத்துக்கு சென்று கொண்டிருக்கிறது. பிரதமர் தலைமையிலான ஆணையம் கூடுவதற்கு எட்டு நாள்களே உள்ளன. இந்த நிலையில், தமிழக அரசு மனு மீது நீதிமன்றம் உத்தரவு எதையும் பிறப்பிக்கக் கூடாது'' என்று கேட்டுக் கொண்டார்.

ஆனால், தமிழக அரசு வழக்குரைஞர் தொடர்ந்து தமிழகத்தின் தண்ணீர்த் தேவையை வலியுறுத்தினார்.

இதைத் தெடார்ந்து பேசிய கர்நாடக அரசு வழக்குரைஞர், ""நல்லெண்ண அடிப்படையில் காவிரியில் இருந்து தமிழகத்துக்கு கூடுதலாக வினாடிக்கு 2500 கன அடி நீரை செப்டம்பர் 12-ம் தேதி முதல் 20-ம் தேதிவரைத் திறந்து விடுகிறோம்'' என்றார். இதையடுத்து நீதிபதிகள் கூறியதாவது:

""காவிரியில் இருந்து தமிழகத்துக்கு வரும் 12-ம் தேதி முதல் 20-ம் தேதிவரை நாள்தோறும் வினாடிக்கு 10 ஆயிரம் கன அடி நீரைத் கர்நாடகம் தர வேண்டும்'' என்று நீதிபதிகள் தெரிவித்தனர்.

## சம்பா சாகுபடி தொகுப்பு திட்டத்துக்கு முதல்வர் ரூ. 53.53 கோடி ஒதுக்கீடு'

First Published : 10 Sep 2012 12:59:13 PM IST

நீடாமங்கலம், செப். 9: காவிரி டெல்டா மாவட்டங்களில் சம்பா நெல்பயிர் பரப்பு மற்றும் உற்பத்தித் திறனை பெருக்கிட சம்பா சாகுபடி சிறப்பு தொகுப்பு திட்டத்துக்காக முதல்வர்

ஜெயலலிதா ரூ. 53.53 கோடியை ஒதுக்கீடு செய்துள்ளார் என்று மாநில உணவு அமைச்சர் ஆர். காமராஜ் தெரிவித்தார்.

திருவாரூர் மாவட்டம், வலங்கைமான் வட்டம், ஆலங்குடியில் சம்பா சாகுபடி சிறப்பு தொகுப்பு திட்ட தொடக்க விழா ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

விழாவில் அமைச்சர் மேலும் பேசியது:

மேட்டூர் அணையில் தற்போது தண்ணீர் குறைவாக உள்ளதால், குறுவை சாகுபடியை மேற்கொள்ள இயலாத நிலை ஏற்பட்டுள்ளது. மேட்டூர் அணை நிலவரத்தை ஆய்வு செய்து, காவிரி டெல்டா மாவட்டங்களில் சம்பா சாகுபடியை மேற்கொள்ள சிறப்பு தொகுப்பு திட்டத்தை முதல்வர் ஜெயலலிதா அறிவித்துள்ளார். மேலும், இந்தத் திட்டத்துக்காக ரூ. 53.53 கோடியை முதல்வர் ஜெயலலிதா ஒதுக்கீடு செய்துள்ளார்.

திருவாரூர் மாவட்டத்துக்கு மட்டும் இந்தத் திட்டத்துக்காக ரூ. 12.9 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. நேரடி நெல் விதைப்புக்காக திருவாரூர் மாவட்டத்துக்கு 10 ஆயிரம் ஹெக்டேருக்கு உழவு மானியமாக ரூ. 60 லட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

சமுதாய நாற்றங்கால் அமைத்திட திருவாரூர் மாவட்டத்துக்கு 2500 ஹெக்டேருக்கு ரூ. 4.75 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

25% மானியத்தில் துத்தநாகசல்பேட் வழங்க 13500 ஹெக்டேருக்கு ரூ. 81 லட்சமும், ஜிப்சம் வழங்க ரூ. 1.75 கோடியும், 10700 ஹெக்டேருக்கு நுண்ணூட்டக் கலவை வழங்க ரூ. 24.30 லட்சமும், 27500 ஹெக்டேருக்கு உயிர் உரங்கள் வழங்க ரூ. 32.11 லட்சமும் அரசால் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

அரசின் இந்தத் திட்டங்களை விவசாயிகள் நல்ல முறையில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்றார் காமராஜ்.

விழாவுக்கு மாவட்ட ஆட்சியர் சி. நடராசன் தலைமை வகித்தார். மாவட்ட ஊராட்சித் தலைவர் ஜெயலட்சுமி அம்பிகாபதி முன்னிலை வகித்தார்.

விழாவில் மாவட்ட வருவாய் அலுவலர் ந. ஜீவகனி மற்றும் வேளாண் துறை அதிகாரிகள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

முன்னதாக, வேளாண் இணை இயக்குநர் (பொறுப்பு) க. மயில்வாகனன் வரவேற்றார். முன்னோடி விவசாயி செம்மங்குடி ராஜேந்திரன் நன்றி கூறினார்.

விழாவுக்கான ஏற்பாடுகளை வலங்கைமான் வேளாண் உதவி இயக்குநர் ந. இளஞ்செழியன் செய்திருந்தார்.

## அதிக மகசூல் தரும் கோ 86032 விதைக் கரும்பு'
First Published : 10 Sep 2012 12:58:08 PM IST

தஞ்சாவூர், செப். 9: கோ 86032 விதைக் கரும்பைப் பயன்படுத்துவதன் மூலமாக அதிக மகசூல் பெறலாம் என்றார் அறிஞர் அண்ணா சர்க்கரை ஆலை தலைமை நிர்வாகி தினேஷ் பொன்ராஜ்.

தஞ்சாவூர் மாவட்டம், குருங்குளத்திலுள்ள அறிஞர் அண்ணா சர்க்கரை ஆலை சார்பில் தோப்புவிடுதியில் கிராமக் கூட்டம் மற்றும் இயந்திரம் மூலம் நடவுப் பணி மேற்கொள்ளுதல், தோகைக் கழித்தல் செயல் விளக்க முகாம் அண்மையில் நடைபெற்றது.

முகாமிற்கு தலைமை வகித்த அவர் பேசியது:

கரும்பு விவசாயிகள் அதிகம் லாபம் பெற அகலப்பார் அமைத்து நிலத்தடி சொட்டு நீர்ப்பாசனம் மூலமாக நீர்ப்பாய்ச்சும் போது, சாகுபடி செலவினைக் குறைத்து அதிகம் லாபம் பெற வாய்ப்புள்ளது. அரசு மானியம், வங்கிக் கடன் வசதி ஆகியவை ஆலை சார்பில் ஏற்பாடு செய்யப்படும்.

சர்க்கரை கட்டுமானத்தைக் கூட்டுவதற்கும், அதிக மகசூல் பெறுவதற்கும் கரும்பு ஆராய்ச்சி நிலையங்களிலிருந்து தரமான கோ 86032 விதைக் கரும்பினை விவசாயிகள் பெற்று நடவு செய்ய ஆலை மூலம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. முன்னுரிமை அடிப்படையில் கரும்பு வெட்டு உத்தரவு வழங்குதல், கரும்பு ஏற்ற வாகன வசதி, சீரான முறையில் கரும்பு வெட்டுக் கூலி ஆகியவற்றை நிர்ணயம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது என்றார் அவர்.

ஆலையின் தலைமைக் கரும்பு அலுவலர் கே.எஸ். சந்திரசேகரன், ஆள்கள் பற்றாக் குறை மற்றும் செலவினங்களைக் குறைத்து அதிக மகசூல் பெற வருங்காலங்களில் நடவு செய்வது முதல் அறுவடை செய்வது வரையில் இயந்திரங்களைப் பயன் படுத்துவது, அகலப்பார் அமைப்பது, கரும்பு தோகை உரிப்பதால் ஏற்படும் நன்மைகள் குறித்துப் பேசினர்.

கிராம கரும்பு வளர்ச்சி அலுவலர் என். குருராஜா, முன்னோடி கரும்பு விவசாயிகள் சத்தியமூர்த்தி, முத்துக்குமார், குழந்தையா உள்ளிட்டோர் பேசினர்.

கரும்பு அலுவலர் டி.எஸ்.ஆர். ராஜா வரவேற்றார். அலுவலக மேலாளர் துரை. நாகராஜன் நன்றி கூறினார்.

## சமுதாய நாற்றங்கால் அமைக்க விவசாயிகளுக்கு அமைச்சர் அறிவுறுத்தல்
First Published : 10 Sep 2012 12:57:26 PM IST

தஞ்சாவூர், செப். 9: விவசாயிகள் சமுதாய நாற்றங்கால்களை அமைத்து, நடப்பு சம்பா பருவத்தில் அதிகப் பயன் பெற வேண்டும் என்றார் அமைச்சர் ஆர். வைத்திலிங்கம்.

சம்பா பருவத்தில் விவசாயிகள் மேற்கொள்ள வேண்டிய பணிகள் குறித்து தஞ்சாவூர் மாவட்ட வேளாண்மைத்துறை சார்பில், சம்பா சிறப்பு தொகுப்புத் திட்டக் கருத்தரங்கு தஞ்சாவூரில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

மாவட்ட ஆட்சியர் கா. பாஸ்கரன் தலைமை வகித்தார். தமிழக வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் ஆர். வைத்திலிங்கம் பேசியது:

தமிழகத்திற்கு காவிரியில் கர்நாடகம் ஜூன், ஜூலை, ஆகஸ்ட் மாதங்களில் 90 டிஎம்சி தண்ணீர் தந்திருக்க வேண்டும். இடர்பாடு காலங்களில் காவிரி நதிநீர் ஆணையத்தின் வழிகாட்டுதலின்படி, 45 டிஎம்சி தண்ணீராவது தந்திருக்க வேண்டும்.

ஆனால், கர்நாடக அரசு 9 டிஎம்சி மட்டுமே வழங்கியுள்ளது. எனினும், காவிரி நதிநீர் ஆணையத்தை உடனடியாக கூட்டி, தமிழகத்தின் உரிமையை நிலைநாட்ட முதல்வர் பாடுபட்டு வருகிறார். சிறப்புத் திட்டங்கள் மூலம், குறுவை சாகுபடியை மேம்படுத்த முதல்வர் நடவடிக்கை மேற்கொண்டுள்ளார்.

இதனால், டெல்டா மாவட்டங்களில் 1.50 லட்சம் ஏக்கரில் குறுவை சாகுபடி நடைபெறுகிறது.

செப். 17-ம் தேதி மேட்டூர் அணை திறக்கப்படும். தங்கள் பகுதிக்கு தண்ணீர் எப்போது வரும் என்பதை விவசாயிகள் தெரிந்து கொண்டு, அதற்கேற்ப நாற்றங்கால் அமைக்க வேண்டும்.

தண்ணீர் வசதி உள்ளவர்கள், சமுதாய நாற்றங்கால்களை அமைத்து, அரசின் மானியத்தை பெறுவதோடு, மற்ற விவசாயிகளுக்கும் உதவிகரமாக இருக்க வேண்டும் என்றார் அவர்.

ஆட்சியர் பேசுகையில், தற்போது தஞ்சாவூர் மாவட்டத்தில் 21,500 ஹெக்டேரில் குறுவை சாகுபடி செய்யப்பட்டுள்ளது. குறுவையில் விடுபட்ட பகுதிகளையும், வழக்கமான சம்பா சாகுபடி பரப்பிலும் சம்பா சாகுபடி செய்திட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. கடந்தாண்டு 5 லட்சம் மெட்ரிக்டன் நெல் உற்பத்தி செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டு 6.50 லட்சம் மெட்ரிக்டன் உற்பத்தி செய்யப்பட்டது. தற்போது பயிர் சாகுபடி பரப்பை அதிகரித்து, உணவு உற்பத்தியையும் அதிகரிக்க வேண்டும். எனவே, சிக்கலான சூழ்நிலைகளில் விவசாயிகள் ஒன்றுபட்டு போராடி உணவு உற்பத்தி பணியில் சிறப்பாக பங்கேற்க வேண்டும் என்றார்.

சட்டப்பேரவை உறுப்பினர்கள் எம். ரங்கசாமி, எம். ரத்தினசாமி, ரா. துரைக்கண்ணு, அதிமுக விவசாயப் பிரிவுச் செயலர் கு. தங்கமுத்து ஆகியோர் முன்னிலை வகித்தனர். மாவட்ட வருவாய் அலுவலர் சீ. சுரேஷ்குமார், கும்பகோணம் ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவர் கோவி. மகாலிங்கம், தஞ்சை நகர்மன்றத் தலைவர் சாவித்திரி கோபால் ஆகியோர் வாழ்த்திப் பேசினர்.

வேளாண்மை, வங்கி, கூட்டுறவு, வேளாண்மைப் பொறியியல் துறை, முன்னோடி விவசாயிகள் உள்ளிட்டோர் பேசினர். வேளாண்மை இணை இயக்குநர் முகமதுயாகியா வரவேற்றார். உதவி இயக்குநர் ராமதாஸ் நன்றி கூறினார்.

## தருமபுரி மாவட்டத்தில் செப்.15 முதல் கால்நடைக் கணக்கெடுப்புப் பணி

First Published : 10 Sep 2012 01:22:58 PM IST

தருமபுரி, செப்.9: தருமபுரி மாவட்டத்தில் 19-வது கால்நடைக் கணக்கெடுப்புப் பணி செப்டம்பர் 15-ம் தேதி முதல் அக்டோபர் 14-ம் தேதி வரை நடைபெறுகிறது.

இதுதொடர்பாக தருமபுரி மாவட்ட ஆட்சியர் ஆர். லில்லி சனிக்கிழமை வெளியிட்ட செய்திக்குறிப்பு:

ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு முறை மாநிலம் முழுவதும் கால்நடைக் கணக்கெடுப்புப் பணி நடைபெற்று வருகிறது. 19-வது கால்நடை கணக்கெடுப்புப் பணி தருமபுரி மாவட்டத்தில் செப்டம்பர் 15-ம் தேதி தொடங்குகிறது.

மாவட்டத்தில் உள்ள அனைத்துக் கிராமங்கள், நகரங்களிலும் கணக்கெடுப்பு நடைபெறுகிறது. வீடுகள், நிறுவனங்கள் உள்ளிட்ட அனைத்து இடங்களிலும் வளர்க்கப்படும் அனைத்து வகை கால்நடைகள், கோழி இனங்கள், கருவிகள், உபகரணங்கள் உள்ளிட்ட விவரங்கள் சேகரிக்கப்பட உள்ளன.வீடு, வீடாக நடைபெறும் இந்தக் கணக்கெடுப்புப் பணியில் கணக்கெடுப்பாளர்கள், மேற்பார்வையாளர்கள் ஈடுபடுகின்றனர். இவர்களுக்குத் தேவையான விவரங்களை முழுமையாக வழங்கி கால்நடை கணக்கெடுப்புப் பணி சிறப்பாக நடைபெற அனைவரும் முழு ஒத்துழைப்பு அளிக்க வேண்டும் என்று ஆட்சியர் கேட்டுக் கொண்டுள்ளார்.

## கால்நடை ஆய்வாளர்களும் சிகிச்சை அளிக்க அனுமதி வேண்டும்'

First Published : 10 Sep 2012 12:52:22 PM IST

கரூர், செப். 9: அகில இந்திய கால்நடை மருத்துவக் கவுன்சில் விதிகளின்படி கால்நடை ஆய்வாளர்களும் சிகிச்சை அளிக்க தமிழக அரசு அறிவிப்பு வெளியிட வலியுறுத்தப்பட்டுள்ளது.

கரூரில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற தமிழ்நாடு கால்நடை ஆய்வாளர் சங்க 18-வது மாநில மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட மற்றத் தீர்மானங்கள்:

கால்நடை ஆய்வாளர்களின் கல்வித் தகுதி, பணித் தன்மை ஆகியற்றைக் கணக்கில் கொண்டு நிலை 1, நிலை 2, முதுநிலை கால்நடை மருத்துவ மேற்பார்வையாளர் ஆகியோருக்கு ஊதிய மாற்றம் செய்ய வேண்டும்.

ஒரத்தநாடு, முகுந்தராயபுரம், புதுக்கோட்டை பயிற்சி மையங்களில் பயிற்சி முடித்த ஆய்வாளர் நிலை 2 பதவி வகிப்போரின் ஊதிய குறைபாடுகளை நிவர்த்தி செய்ய வேண்டும். மக்களுக்கு பயனளிக்கக்கூடிய புதிய கால்நடை மருத்துவக் கிளை நிலையங்களை அதிக எண்ணிக்கையில் உருவாக்க வேண்டும்.

கால்நடை ஆய்வாளர் பயிற்சியை மற்ற மாநிலங்களில் உள்ளது போல, பட்டயப் பயிற்சியாக மாற்ற வேண்டும். புதுவை மாநிலத்தில் உள்ளது போல, பயிற்சிக்கான குறைந்தபட்ச கல்வித் தகுதியை பட்டப்படிப்பாக அறிவிக்க வேண்டும்.

1977-ம் ஆண்டு வெக்கை நோய் தடுப்புத் திட்டத்தில் தடுப்பூசியாளராக பணியில் சேர்ந்து, இப்போது கால்நடை ஆய்வாளராக பணிபுரிந்து பதவி உயர்வு இல்லாமல் உள்ளவர்களின் பணிக் காலத்தை கணக்கில் கொண்டு ஊதிய உயர்வு வழங்க வேண்டும்.

உதவி இயக்குநர் அலுவலகங்களில் கால்நடை வளர்ச்சி அலுவலர், ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் ஒரு முது நிலை கால்நடை மருத்துவ மேற்பார்வையாளர் ஆகிய பணியிடங்களை உருவாக்க வேண்டும்.

## விவசாய விளை பொருள்களுக்கு கட்டுப்படியான விலை வழங்கக் கோரிக்கை

First Published : 10 Sep 2012 01:25:36 PM IST

நாமக்கல், செப்.9: விவசாய விளை பொருள்களுக்கு கட்டுப்படியான விலை வழங்க வேண்டும் என்று தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் வலியுறுத்தியுள்ளது.

அந்தச் சங்கத்தின் பள்ளிபாளையம் வடக்கு ஒன்றிய மாநாடு வெப்படையில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

சங்க நிர்வாகி கே.பச்சமுத்து தலைமை வகித்தார். மாவட்டத் தலைவர் எஸ்.கந்தசாமி தொடக்க உரையாற்றினார்.

மாவட்டச் செயலர் பி.பெருமாள், உபதலைவர் எ.ஆதிநாராயணன் ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

கரும்பு விவசாயிகள் சங்க மாநில துணைத் தலைவர் எஸ்.நல்லாக்கவுண்டர், மார்க்சிஸ்ட் ஒன்றியச் செயலர் எஸ்.தனபால் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். கரும்பு விவசாயிகள் சங்க மாநிலச் செயலர் டி.ரவீந்திரன் நிறைவுரையாற்றினார். கரும்பு டன்னுக்கு ரூ.3,000, மஞ்சள் குவிண்டால் ஒன்றுக்கு ரூ.12,000, குச்சிக்கிழங்கு டன்னுக்கு ரூ.10,000, நெல் மற்றும் தேங்காய்க்கு கட்டுப்படியான விலை நிர்ணயிக்க வேண்டும். பசும் பால் லிட்டருக்கு ரூ.25-ம், எருமைப்பால் லிட்டருக்கு ரூ.35-ம் கொள்முதல் விலையாக நிர்ணயிக்க வேண்டும். விவசாயத்துக்கு தடையில்லா மும்முனை மின்சாரம் வழங்க வேண்டும். உரம், இடு பொருள்கள் மானிய விலையில் வழங்க வேண்டும்.

மேட்டூர் கீழகரை வாய்க்காலில் பாசனத்துக்கு தண்ணீர் திறந்துவிட வேண்டும். கூட்டுறவு மற்றும் தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளில் விவசாயிகளுக்கு வட்டியில்லாக் கடன் வழங்க வழங்க வேண்டும். தேசிய கிராமப்புற வேலைவாய்ப்புத் திட்டத்தில் தொழிலாளர்களை விவசாய பணிகளுக்கும் பயன்படுத்த வேண்டும்.

60 வயதுக்கு மேற்பட்ட விவசாயிகளுக்கு ஓய்வுதியம் வழங்க வேண்டும் ஆகிய தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. தொடர்ந்து, சங்கத்தின் புதிய தலைவராக எஸ்.வேலுமணி, செயலராக பி.ராமசாமி, பொருளாளராக பி.சண்முகம் மற்றும் 12 பேர் கொண்ட ஒன்றியக் குழு தேர்வு செய்யப்பட்டனர்.

121 கிராம ஊராட்சிகளில் செப். 12-ல் சிறப்பு கிராம சபைக்கூட்டம்
First Published : 10 Sep 2012 12:55:10 PM IST

பெரம்பலூர், செப். 9: பெரம்பலூர் மாவட்டத்தில் உள்ள 121 கிராம ஊராட்சிகளில், செப். 12-ம் தேதி சிறப்பு கிராம சபைக் கூட்டம் நடைபெறுகிறது என்றார் மாவட்ட ஆட்சியர் தரேஸ் அஹமது. இதுகுறித்து அவர் வெளியிட்ட செய்திக்குறிப்பு:

சம்பந்தப்பட்ட ஊராட்சி மன்ற தலைவர்கள் தலைமையில் நடைபெறும் கூட்டத்தில், தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ் 2012-13-ம் ஆண்டுக்கு நில அபிவிருத்திப் பணிகள் மற்றும் தாழ்த்தப்பட்ட வகுப்பினர், பழங்குடியினர் மற்றும் சிறு, குறு விவசாயிகளுக்கு சொந்தமான நிலங்களில் பணிகள் மேற்கொள்வதற்கு விவசாயிகள் பட்டியல் வைக்கப்பட்டு அங்கீகாரம் பெறுதல். தேசிய கால் மற்றும் வாய் நோய் தடுப்பு திட்டத்தின் கீழ் வரும் 15-ம் தேதி முதல் கால்நடைகளுக்கு தடுப்பூசி போடுதல் மற்றும் 19-வது கால்நடை கணக்கெடுப்பு பணி மேற்கொள்ளுதல் ஆகியவை குறித்து விவாதிக்கப்பட்டு, தீர்மானிக்கப்பட உள்ளது.

இக்கூட்டத்தில், சம்பந்தப்பட்ட மக்களவை மற்றும் சட்டப்பேரவை உறுப்பினர்கள், உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள், கிராம பொதுமக்கள் கலந்துகொள்ள வேண்டும். கூட்டத்தை கண்காணிக்க, ஒவ்வொரு ஊராட்சிக்கும் சம்மந்தப்பட்ட வட்டார வளர்ச்சி அலுவலரால் பற்றாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். எனவே, இக்கூட்டத்தில், கிராமப் பொதுக்கள் அதிகளவு கலந்துகொண்டு ஊராட்சிகளின் வெளிப்படையான நிர்வாகத்திற்கு வழிவகுத்து, ஒத்துழைப்பு அளிக்க வேண்டும் என்றார் அவர்.

விதை உற்பத்தியாளர்களுக்கு புத்தூட்டப் பயிற்சி
First Published : 10 Sep 2012 01:24:31 PM IST

கிருஷ்ணகிரி, செப்.9: கிருஷ்ணகிரியில் விதை உற்பத்தியாளர்களுக்கு அட்மா திட்டத்தின் கீழ் சனிக்கிழமை புத்தூட்டப் பயிற்சி அளிக்கப்பட்டது.

வேளாண் இணை இயக்குநர் ஜபருல்லா தலைமை வகித்து பயிற்சியைத் தொடக்கி வைத்தார். மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) நாகராஜ், விதை சட்டம் மற்றும் விதிமுறைகள் குறித்துப் பேசினார்.

விதை சான்று உதவி இயக்குநர் சண்முகம், தரமான விதை உற்பத்தி, விதைப்பு அறிக்கையை பதிவு செய்தல், சுத்திகரிப்பு அறிக்கை பெறுதல் மற்றும் சான்றேட்டை பெறுதல் ஆகியவை குறித்து எடுத்துரைத்தார்.

இதில், மாவட்டம் முழுவதிலுமிருந்து ஏராளமான விதை உற்பத்தியாளர்கள் கலந்து கொண்டனர்.

## சேலத்தில் தொடரும் பலத்த மழை

First Published : 10 Sep 2012 01:18:56 PM IST

சேலம், செப். 9: சேலம் மாவட்டத்தில் கடந்த சில நாள்களாகப் பெய்து வரும் பலத்த மழையால் ஏரி, கிணறுகளில் நீர்மட்டம் தொடர்ந்து அதிகரித்து வருகிறது.

சேலம் மாவட்டத்தில் கடந்த சில மாதங்களாகப் போதிய அளவு மழை பெய்யாததால் நீர்த்தேக்கங்கள், ஏரி, கிணறுகள் வறண்டன. இதனால், குடிநீர் பஞ்சம் ஏற்படும் அபாயம் ஏற்பட்டது. இந்த நிலையில், கடந்த சில நாள்களாக சேலம் மாநகரம், மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் மழை பெய்து வருகிறது. சேலம் மாநகரில் கடந்த மூன்று நாள்களாகத் தொடர்ந்து பலத்த மழை பெய்து வருகிறது. சனிக்கிழமை இரவு சுமார் 10 மணிக்குத் தொடங்கிய மழை அதிகாலை ஒரு மணி வரையிலும் நீடித்தது. அதே போலவே, ஞாயிற்றுக்கிழமை மாலை 4.30 மணியளவில் தொடங்கிய மழை, 6 மணி வரையிலும் தொடர்ந்து பெய்தது. இதேபோன்று, சேலம் மாவட்டத்தின் ஓமலூர், ஏற்காடு, வாழப்பாடி உள்ளிட்ட பல்வேறு பகுதிகளிலும் தொடர்ந்து மழை பெய்து வருகிறது.

இதனால், அந்தப் பகுதிகளில் உள்ள ஏரி, கிணறுகள் நீர்மட்டம் தொடர்ந்து உயர்ந்து வருகிறது. தொடர் மழையால் நிலத்தடி நீர்மட்டம் உயர்ந்து வருவது விவசாயிகளை மகிழ்ச்சியில் ஆழ்த்தியுள்ளது.

சேலம் மாவட்டத்தில் ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணி வரையிலும் பதிவான மழை அளவு (மில்லி மீட்டரில்):

சேலம் 41, ஏற்காடு 42, ஓமலூர் 26, வாழப்பாடி 7, மேட்டூர் 4.4, எடப்பாடி 4, தம்மம்பட்டி 1.2. மாவட்டம் முழுவதும் சனிக்கிழமை இரவு மட்டும் 125.6 மில்லி மீட்டர் மழை பெய்துள்ளது.

விவசாயி சாவு First Published : 10 Sep 2012 12:54:01 PM IST

கரூர், செப். 9: கரூர் அருகே வயலில் வேலைசெய்து கொண்டிருந்தபோது தவறி விழுந்த விவசாயி சனிக்கிழமை உயிரிழந்தார்.

கரூர் திருமுக்கூடலூர் பகுதியைச் சேர்ந்தவர் விவசாயி கந்தசாமி (70). கடந்த 10 நாட்களுக்கு முன்னர் வயலில் வேலை செய்து கொண்டிருந்தபோது தவறி விழுந்தார்.

தலையில் அடிபட்ட அவர் கரூர் தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு, சில நாடுகளுக்கு முன்னர் வீடு திரும்பினார்.

இந்நிலையில், சனிக்கிழமை மயக்கமடைந்ததால் திருச்சி தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட அவர், மூளையில் ரத்தம் உறைந்ததால் சனிக்கிழமை உயிரிழந்தார்.

வாங்கல் போலீஸôர் வழக்குப் பதிந்து விசாரிக்கின்றனர்.

தினகரன்

## மேட்டூர் அணை நீர்மட்டம் 80 அடி



*06:21:48*

Tuesday

2012-09-11

மேட்டூர் : மேட்டூர் அணையின் நீர்மட்டம் 80 அடியை நெருங்குகிறது. காவிரி நீர்பிடிப்பு பகுதிகளில் மழை பெய்வதன் காரணமாக நீர்மட்டம் படிப்படியாக உயர்ந்து வருகிறது. கர்நாடக மாநிலத்தில் உள்ள அணைகளில் இருந்து, கூடுதல் தண்ணீர் திறந்து விடப்பட்டால் அணைக்கு நீர்வரத்து மேலும் அதிகரிக்கும்.

விவசாய விளைபொருட்களை பாதுகாத்து வைக்க

ரூ.37.50 கோடி மதிப்பில் 48 சேமிப்பு கிடங்குகள்



*06:15:41*

Tuesday

2012-09-11

சென்னை : விவசாயிகள் விளைபொருட்களை பாதுகாத்து வைக்க ரூ.37.50 கோடியில் 18 நவீன சேமிப்பு கிடங்கு, 50 குளிர்பதன கிடங்குகள் அமைக்கப்படும் என்று முதல்வர் ஜெயலலிதா கூறியுள்ளார். விவசாயிகள் தங்களின் விளைபொருட்களை பாதுகாப்பாக இருப்பில் வைத்து, அவற்றிற்கு நல்ல விலை கிடைக்கும்போது விற்பனை செய்யும் வகையில் 18 நவீன சேமிப்பு கிடங்குகள் மற்றும் 50 குளிர்பதன கிடங்குகள் ஸீ37.50 கோடி செலவில் கட்ட முடிவு செய்யப்பட்டுள்ளது.

இதன்படி, திருவண்ணாமலை பகுதியில் ஆரணி மற்றும் தேசூர் ஒழுங்குமுறை விற்பனை கூடங்கள், ஈரோட்டில் வெள்ளக்கோவில், அலங்கியம் மற்றும் மூலனூர், வேலூரில் கலவை, விழுப்புரத்தில் அவலூர் பேட் டை, திண்டிவனம், நாகப்பட்டினத்தில் குத்தாலம், ராமநாதபுரத்தில் தேவக்கோட்டை, கோவையில் செஞ்சேரி, ஆனைமலை, தர்மபுரியில் ஊத்தங்கரை, தேனியில் சின்னமனூர், திருவாரூரில் மன்னார்குடி, திருச்சியில் பெரம்பலூர், கடலூரில் காட்டு

மன்னார்கோவில், குறிஞ்சிபாடி ஆகிய 18 ஒழுங்குமுறை விற்பனை கூடங்களில் 2,000 மெட்ரிக் டன் கொள்ளளவு கொ ண்ட நவீன சேமிப்பு கிடங்குகள் கட்டப்பட உள்ளது.

இதேபோன்று, செங்கம், போளூர், கடலூர், சத்தியமங்கலம், கொடுமுடி, அந்தியூர், பூஞ்சம்புளியம்பட்டி, வேலூர், திருப்பத்தூர், வாணியம்பாடி, பெரம்பலூர், செஞ்சேரி, ஆனைமலை, அவினாசி, அன்னூர், தொண்டாமுத்தூர், உடுமலைப்பேட்டை, விழுப்புரம், உளுந்தூர்பேட்டை, அரூர், பென்னாகரம், போச்சம்பள்ளி, ஊத்தங்கரை, ராஜபாளையம், அருப்புக்கோட்டை, சிங்கம்புணேரி, கமுதி, ஆத்தூர், நாமகிரிப்பேட்டை, திருச்செங்கோடு, பரமத்தி வேலூர், கெங்கவல்லி, பழநி, திண்டுக்கல், கோபால்பட்டி, திங்கள்சந்தை, தஞ்சாவூர், தேனி, கம்பம், திருமங்கலம், தூத்துக்குடி, திருநெல்வேலி, வள்ளியூர், கோவில்பட்டி, எட்டயபுரம், தென்காசி, ஆலங்குடி ஆகிய 50 இடங்களில் 25 மெட்ரிக் டன் கொள்ளவில் குளிர்பதனக் கிடங்குகள் அமைக்கப்படும்.

மேலும், உணவு பதப்படுத்துவதன் முக்கியத்துவத்தை அறியும் வண்ணம் விளைச்சலை பெருக்கி, விவசாயிகளின் வருமானத்தை அதிகரிக்க தமிழகத்தில் 2012,13ம் ஆண்டு முதல், தேசிய உணவு பதப்படுத்தும் இயக்கத்தை செயல்படுத்தவும் முடிவு செய்யப்பட்டுள்ளது. இந்த இயக்கத்தின் திட்டங்களை தமிழகத்தில் செயல்படுத்த, வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறை, மாநில ஒருங்கிணைப்பு முகமையாக செயல்படுவதற்கும், அத்துறையின் ஆணையரை இந்த தேசிய உணவு பதப்படுத்தும் இயக்கத்தின் இயக்குநராக நியமனம் செய்வதற்கும் முதல்வர் உத்தரவிட்டுள்ளார். இவ்வாறு தமிழக அரசு நேற்று வெளியிட்ட செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டின் தேவைக்காக

**தினமும் 10,000 கனஅடி தண்ணீர் திறந்து விட வேண்டும்**



*01:45:03*

Tuesday

2012-09-11

புதுடெல்லி : தமிழகத்திற்கு தினமும் 10 ஆயிரம் கனஅடி தண்ணீர் திறந்து விட கர்நாடக அரசுக்கு உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.  சம்பா சாகுபடிக்கு தினமும் 2 டி.எம்.சி.தண்ணீர் திறந்து விடக்கோரி தமிழக அரசின் சார்பில் உச்ச நீதிமன்றத்தில் கடந்த வாரம் புதிய மனு தாக்கல் செய்யப்பட்டது. இந்த மனுவை நீதிபதிகள் டி.கே.ஜெயின், மதன்லோக்காய் ஆகியோர் விசாரித்து,  வறட்சி காலத்தில் இருந்து இதுவரை தமிழகத்திற்கு எவ்வளவு தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளது என்ற தெளிவான அறிக்கையை 10ம் தேதி கர்நாடக அரசு உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய வேண்டும் என்று உத்தரவிட்டனர்.

அதன்படி இந்த வழக்கு நீதிபதிகள் டி.கே.ஜெயின், மதன்லோக்காய் ஆகியோர் முன் நேற்று மீண்டும் விசாரணைக்கு வந்தது. அப்போது தமிழக அரசு சார்பாக மூத்த வக்கீல் வைத்தியநாதன் ஆஜராகி, தமிழகத்தை பொறுத்தை வரை காவிரி டெல்டா பகுதியில் 9 மாவட்டங்கள், காவிரி நீரை நம்பியுள்ளது. ஒவ்வொரு ஆண்டும் ஜூன் மாதம் 12ம் தேதி மேட்டூர் அணை, சம்பா சாகுபடிக்காக நீர் திறந்துவிடுவது வழக்கம், இந்த முறை கர்நாடகம் தண்ணீரை திறந்தவிட மறுத்து வருவதால் சம்பா சாகுபடி செய்வதற்கு தண்ணீரை திறந்துவிட முடியவில்லை. சம்பா சாகுபடி செய்வதில் கால தாமதம் ஏற்பட்டுள்ளது.

9 மாவட்டத்தில் விவசாயம் பெரும் அளவு பாதிக்கப்பட்டுள்ளது. கர்நாடகம் தமிழகத்திற்கு தர வேண்டிய தண்ணீரை திறந்து விட்டால் மட்டுமே மேட்டூர் அணை நிரம்பும். விவசாயத்திற்கு தண்ணீர் திறந்துவிட முடியும். கர்நாடகம் தனது நிலையை மாற்றிக்கொண்டு தமிழகத்திற்கு தண்ணீர் திறந்து விட வேண்டும். பிரதமர் தலைமையிலான காவிரி நதி நீர் ஆணையமானது வரும் 19ம் தேதி கூட முடிவு செய்யப்பட்டுள்ளது. அந்த இடைப்பட்ட காலத்தில் தினமும் 2 டி.எம்.சி. தண்ணீர் திறந்து விட கர்நாடகத்திற்கு உத்தரவிட வேண்டும் என்றார்.

கர்நாடகா சார்பில் ஆஜரான வக்கீல், தினமும் 10 ஆயிரம் கியூசிக்ஸ் தண்ணீர் தமிழகத்திற்கு திறந்து விட முடிவு செய்துள்ளோம். பிரதமர் தலைமையிலான காவிரி நிதி நீர் ஆணையம் விரைவில் கூட உள்ளது. அதுவரை இந்த தண்ணீரை தமிழகத்திற்கு திறந்த விடுகிறோம். இந்த வழக்கை நிலுவையில் வைத்திருக்க வேண்டும். காவிரி நதி நீர் ஆணையத்தின் கூட்டத்தின் முடிவுக்கு பிறகு இந்த வழக்கில் முடிவு எடுக்க வேண்டும் என்றார்.

இதை நீதிபதிகள் ஏற்றுக்கொண்டு, வரும் 12ம் தேதி முதல் 20ம் தேதி வரை இடைக்காலமாக தமிழகத்திற்கு தினமும் 10 ஆயிரம் கனஅடி தண்ணீர் கர்நாடக அரசு திறந்து விட வேண்டும், பிரதமர் தலைமையிலான கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுக்கு பிறகு இந்த வழக்கு விசாரணைக்கு எடுத்து கொள்ளப்படும்.இந்த வழக்கில் மத்திய அரசு சார்பாக வக்கீல் ஆஜராகாமல் இருப்பதற்கு எங்களுக்கு வருத்தம் அளிக்கிறது, ஆச்சரியமாகவும் உள்ளது. ஆணையத்தின் கூட்டத்தில் இரு மாநில அரசுகளும் கலந்து பேசி சுமூகமான முடிவுகளை ஏற்படுத்தி கொள்ளும் என்று நாங்கள் நம்புகிறோம் என்றனர்.

## சர்க்கரை உற்பத்தி 8% குறையும்



*01:19:19*

Tuesday

2012-09-11

புதுடெல்லி : நடப்பாண்டில் (2012,13) சர்க்கரை உற்பத்தி 8 சதவீதம் குறைந்து 2.4 கோடி டன்னாக இருக்கும் என்று இந்திய சர்க்கரை ஆலைகள் சங்கம் (இஸ்மா) கணித்துள்ளது. நாட்டின் மொத்த கரும்பு உற்பத்தியில் 45 சதவீதம் விளையும் மகாராஷ்டிரா, கர்நாடகா மாநிலங்களில் இந்தாண்டு பல பகுதிகளில் பருவ மழை இல்லாமல் வறண்டு கிடக்கின்றன. இதனால், கரும்பு உற்பத்தி பாதித்துள்ளது. இதற்கேற்ப சர்க்கரை உற்பத்தி குறைய வாய்ப்பு உள்ளது.

மகாராஷ்டிரா மாநிலத்தில் அதிகாரிகள் நேரில் சென்றும், செயற்கைக் கோள் படங்கள் மூலமும்,

உறுப்பினர்கள் அளித்த தகவல்களின் அடிப்படையிலும் ஆய்வு நடத்தியதில் இந்தாண்டு 65 லட்சம் டன் அளவுக்கு சர்க்கரை உற்பத்தி இருக்கும் என தெரிய வந்துள்ளது. கடந்த 2011,12ம் ஆண்டில் இம்மாநிலத்தில் 89.5 லட்சம் டன் சர்க்கரை உற்பத்தி செய்யப்பட்டது.

அதேபோல, கர்நாடகத்தில் 30 லட்சம் டன் சர்க்கரை உற்பத்தியாகும் என தெரிய வந்துள்ளது. இங்கு கடந்த ஆண்டு 38 லட்சம் டன் சர்¢க்கரை உற்பத்தியானது. வறட்சி காரணமாக கரும்பின் தரம் பாதித்து சர்க்கரை குறைவாகவே கிடைக்கும் என்பதும், கரும்பு பயிரிடும் பரப்பளவு 2 சதவீதம் குறைந்ததும் இதற்கு காரணமாகும்.கர்நாடகா, மகாராஷ்டிராவில் சர்க்கரை உற்பத்தி குறையும் என எதிர்பார்க்கப்படும் நிலையில் உத்தரப்பிரதேசத்தில் இந்தாண்டு சர்க்கரை உற்பத்தி 9.26 லட்சம் டன் அதிகரிக்கும் என தெரிகிறது.

## முட்டை விலை 360 காசுகளாக உயர்ந்தது



*01:18:11*

Tuesday

2012-09-11

நாமக்கல் : நாமக்கல் மண்டலத்தில் நேற்று தேசிய முட்டை ஒருங்கிணைப்பு குழுவின் விலை நிர்ணயக்குழு கூட்டம் நடந்தது. இதில் பண்ணையாளர்கள், வியாபாரிகள் பங்கேற்றனர். முட்டைக்கான தேவை தொடர்ந்து அதிகரித்து வருவதால் விலையை உயர்த்த முடிவு செய்யப்பட்டது.  இதையடுத்து, விலை 6 காசு உயர்த்தப்பட்டு, ஒரு முட்டையின் பண்ணை

கொள்முதல் விலை 360 காசுகளாக நிர்ணயம் செய்யப்பட்டது. கடந்த ஒரே வாரத்தில் முட்டை விலை 25 காசுகள் வரை உயர்ந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

## கடும் வறட்சி 5 ஏக்கர் நிலமிருந்தால் கடன் தள்ளுபடிவேண்டும் காங். விவசாய பிரிவு கோரிக்கை

பதிவு செய்த நேரம்:2012-09-10 11:01:23

திருச்சி, : ஐந்து ஏக்கருக்கு மேல் நிலமிருந்தால் விவசாய கடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என மத்திய நிதியமைச்சரிடம் விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

தமிழ்நாடு காங்கிரஸ் விவசாய பிரிவு மாநில துணை தலைவர் புலியூர் நாகராஜன், மத்தி நிதியமைச்சர் சிதம்பரத்திற்கு அனுப்பியுள்ள கோரிக்கை: மத்திய அரசு 2008ம் ஆண்டில் கடன் நிவாரண சட்டம் மூலம் 80ஆயிரம் கோடி விவசாய கடன் தள்ளுபடி செய்தது. அதில் 5 ஏக்கருக்கு உட்பட்டவர்களுக்கு முழுமையாகவும், 5 ஏக்கருக்கு மேல் உள்ளவர்களுக்கு 25 சதவீதமும் தள்ளுபடி செய்யப்பட்டது. அதில் 5 ஏக்கருக்கு மேல் உள்ள விவசாயிகள் தங்களுக்கும் முழுமையாக தள்ளுபடி செய்ய வேண்டும் என கடந்த 2008ம் ஆண்டு முதலே விவசாயி கள் கோரிக்கை விடுத்து வருகின்றனர். கடுமையான வறட்சியும், வெள்ள சேதமும் மறுபுறம் வாங்கிய கடனை திரும்ப கட்ட முடியாத அவல நிலை மேலும் விவசாயத்தை தொடர முடியாத துன்பத்தில் ஆழ்ந்துள்ள விவசாயிகளின் துயரத்தை போக்குகின்ற வகையில் மத்திய அரசு 5 ஏக்கருக்கு மேல் உள்ள விவசாயிகள் பட்ட நடப்பு தேதி வரை உள்ள கடனை முழுமையாக ரத்து செய்து இந்திய விவசாயிகள் அனைவரும் கடனற்றவர்கள் என மத்திய அரசு அறிவித்து விவசாயிகளை காப்பாற்ற வேண்டும். இவ்வாறு அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## திருச்சி மாவட்டத்தில் சம்பா நெல் சாகுபடிக்கு ரூ 3.38 கோடி நிதி ஒதுக்கீடு கலெக்டர் தகவல்

பதிவு செய்த நேரம்:2012-09-10 11:01:33

திருச்சி, : சம்பா சாகுபடி சிறப்பு தொகுப்பு திட்டத்தின் கீழ் திருச்சி மாவட்டத்தில் ரூ.3.38 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள் ளதாக கலெக்டர் ஜெயஸ்ரீ தெரிவித்தார்.

திருச்சி மாவட்டம் மணிகண்டம் ஊராட்சி ஒன்றியம், பள்ளக்காட்டில் தமிழக முதல்வர் சம்பா சாகுபடி சிறப்புத் தொகுப்பு திட்டத்தின் கீழ் விவசாயி ராமலிங்கத்தின் வயலில் சமுதாய நாற்றாங்கால் அமைக்கும் பணியை மாவ ட்ட கலெக்டர் ஜெயஸ்ரீ தொடங்கி வைத்தார். அப் போது அவர் கூறியது:

காவிரி நீர்ப்பிடிப்பு பகுதிகளில் தென்மேற்கு பருவமழை குறைந்ததால் இவ்வாண்டு குறுவை சாகு படி பாதித்தது. தற்போது மேட்டூர் அணையில் சம்பா சாகுபடிக்கு போதுமான நீர் இல்லாததை

கருத்தில் கொண்டும், வடகிழக்கு பருவமழை அக்டோபரில் துவங்கும் என்பதை எதிர் நோக்கியும், சம்பா சகுப டிக்காக வரும் 17ம் தேதி மேட்டூர் அணை திறக்கப் படும் என முதல்வர் அறி வித்தார். திருச்சி மாவட்டத்தில் சம்பா சாகுபடி சிறப்பு தொகுப்பு திட்டத்தின் கீழ் 84 கிராமங்களில் 8,048 எக் டேர் பரப்பில் திருந்திய நெல் சாகுபடி செய்யப்ப டும். உற்பத்தி திறனை அதி கரிக்கும் நோக்கில் டெல்டா பகுதியில் 8,500 எக்டேரி லும், டெல்டா அல்லாத பிற பகுதிகளில் 9,600 எக் டேரிலும் 75% மானியத்தில் நெல் நுண்ணூட்ட உரம் விநியோகிக்கப்பட உள்ளது.
சம்பா சாகுபடி சிறப்பு தொகுப்பு திட்டத்தில் திருச்சி மாவட்டத்தில் இப் புதிய உற்பத்தி பெருக்க நட வடிக்கைக்காக ரூ.3 கோடி யே 38 லட்சத்து 40 ஆயிரம் நிதி ஒதுக்கப் பட் டுள்ளது. இச்சிறப்பு திட்டத் தால் நடப்பு சம்பா பருவத் தில் திருச்சி மாவ ட்டத்தில் நெல் சாகுபடி பரப்பு அதி கரிக்க ப்படுவ துடன் கூடு தல் மகசூ லை விவசாயிகள் பெற வழிவகை ஏற்படும் என்றார்.
இந்நிகழ்ச்சியில் மணி கண்டம் ஊராட்சி ஒன் றியக்குழுத் தலைவர் முத்துக்கருப்பன், ஒன்றியக் குழு உறுப்பினர் திருமூர்த்தி, பள்ளக்காடு ஊராட்சி தலைவர் சுதாகர், கலெக்ட ரின் நேர்முக உதவியாளர் பாண்டியராஜன் மற்றும் விவசாய சங்க பிரதிநிதிகள், விவசாயிகள் கலந்து கொண் டனர்.

## 12ம் தேதி சிறப்பு கிராம சபை கூட்டம் தேசிய ஊரக வேலை உறுதி திட்டம் மூலம் விவசாய நிலங்கள் மேம்பாடு கலெக்டர் செல்வராஜ் தகவல்

பதிவு செய்த நேரம்:2012-09-10 10:26:22

நெல்லை, : தேசிய ஊரக வேலை உறுதி திட்டம் மூலம் விவசாய நிலங்களை மேம்பாடு செய்வதற்காக வருகிற 12ம் தேதி சிறப்பு கிராம சபை கூட்டம் நடத்தப்படுகிறது.
இதுகுறித்து கலெக்டர் செல்வராஜ் கூறியிருப்பதாவது: ஆதிதிராவிடர், பழங்குடியினர், சிறு மற்றும் குறு விவசாயிகளின் நிலங்களை விவசாயத்திற்கு ஏற்ற வகையில் மேம்பாடு செய்ய மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை திட்டத்தின் கீழ் மனித உழைப்பை பயன்படுத்தி நடவடிக்கை மேற்கொள்ள அரசு உத்தரவிட்டுள்ளது.
இதன் முதற்கட்டமாக கிராம பஞ்சாயத்துகள் குக் கிராமங்கள் வாரியாக சிறு, குறு மற்றும் ஆதிதிராவிட பழங்குடியினர்களின் விவசாய நிலங்களின் பட்டியல்கள் கிராம நிர்வாக அலுவலர்கள், உதவி வேளாண் அலுவலர்கள் மூலம் தயாரிக்கப்பட்டு வருகிறது. இதில் அனைத்து விவசாயிகளின் பட்டியல்கள் எந்த விடுதலும் இன்றி சேர்க்க அரசு உத்தரவிட்டுள்ளது.
இவ்வாறு தயார் செய்யப்படும் பட்டியல்கள் வருகிற 12ம் தேதி அந்தந்த கிராம பஞ்சாயத்துகளில் நடைபெறும் சிறப்பு கிராம சபை கூட்டத்தில் ஒப்புதலுக்காக வைக்கப்பட உள்ளது. எஸ்சி, எஸ்டி

சிறு, குறு விவசாயிகள் தங்கள் பெயர் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளதா என்பதை கிராம சபையில் தெரிந்து கொள்ளலாம்.

இந்த திட்டத்தின் மூலம் நில மேம்பாட்டுப் பணிகளை மேற்கொள்ளவும் அரசு முடிவு செய்துள்ளது. அரசு விவசாய பண்ணைகள், தோட்டக்கலைத்துறை பண்ணைகள், கால்நடைத் துறை பண்ணைகள், வனப்பகுதிகளில் நில மேம்பாடு செய்தல், சீர்திருத்தம் செய்தல் மற்றும் காடு வளர்த்தல், தரிசு நிலங்களை விவசாய நிலங்களாக மாற்றுதல், வறுமைக்கோட்டிற்கு கீழ் உள்ள ஆதிதராவிடர், பழங்குடியினர், சிறு மற்றும் குறு விவசாய நிலங்களில் தோட்டங்களை ஏற்படுத்துதல், விரிவுபடுத்துதல், சிறுகுட்டைகள் மற்றும் நீர்பிடிப்பு வசதிகள் ஏற்படுத்துதல். பொது மற்றும் தனியார் நிலங்களில் பண்ணை குட்டைகள், ஊரணிகள் ஏற்படுத்துதல், சிறு பாசன டக் வெல் மற்றும் பண்ணை குட்டைகள் மூலம் நீர்ப்பாசன வசதிகளை ஏற்படுத்துதல், ஏற்கெனவே உள்ள கிணறுகளை புனரமைப்பு செய்தல் மற்றும் ஆழப்படுத்துதல், விவசாய பருவ காலங்களில் விவசாய நடவடிக்கைகளை அபிவிருத்தி செய்வதற்காக மனித சக்தியை உருவாக்குதல், விவசாய மற்றும் தோட்ட நிலங்களில் பாசன வசதிகள் மேமபடுத்துதல், வடிகால் வசதிகள் ஏற்படுத்துதல் போன்ற பணிகள் மேற்கொள்ள அரசு முடிவு செய்துள்ளது.
தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தின் மூலம் 100 சதவீதம் மனித உழைப்பில் விவசாய நிலங்களை மேம்பாடு செய்வதன் மூலம் விவசாயத்தில் புதிய புரட்சி ஏற்படலாம் என அரசு எதிர்பார்க்கிறது. எனவே 12ம் தேதி நடைபெறும் சிறப்பு கிராம சபை கூட்டத்தில் விவசாயிகள் அனைவரும் கலந்து கொள்ள வேண்டும்.
இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

## விதைப்பரிசோதனை ஆய்வகத்தில் பயிர்களுக்கு முளைப்புத்திறன் பரிசோதனை

பதிவு செய்த நேரம்:2012-09-10 10:26:06

நெல்லை, : நெல்லையிலுள்ள விதைப்பரிசோதனை ஆய்வகத்தில் ஒவ்வொரு பயிருக்கும் முளைப்புத்திறன் பரி சோதனை செய்யப்படுகிறது.
நெல்லையிலுள்ள விதைப்பரிசோதனை ஆய்வகத்தில் ஒவ்வொரு பயிருக்கும் முளைப்புத்திறன் பரிசோதனை செய்யப்படுகிறது. முளைப்புத்திறன் என்பது விதையானது உயிரும் வீரியமும் கொண்டு இயங்குவதை காட்டுவது ஆகும். நல்ல முளைப்புத்திறன் கொண்ட விதை குவியல்களிலிருந்து விதைக்கப்படும் விதை மூலம் நிறைவான பயிர் எண்ணிக்கையில் வயலில் பயிர்கள் செழித்து வளரும். ஆனால் முளைப்புதிறன் குறைந்த விதைகளை பயன்படுத்தி னால் குறைந்த அளவிலேயே பயிர்கள் வளரும். அதனால் பயிர் மகசூல் பாதிக்கப்படும்.
விதைச்சட்டத்தின்படி ஒவ்வொரு பயிருக்கும் குறைந்த பட்ச முளைப்புத்திறன் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.
பயிர்களுக்கு ஏதுவான சூழ்நிலையில் விதையின் கரு முளைவிட்டு பின்னர் வளர்ச்சிக்கு

அத்தியாவசியமான பாகங்கள் உருவாகி இயல்பான செடியாவதற்குரிய திறனே முளைப்புத்திறன் ஆகும். முளைப்புத்திறன் சோதனையின் போது இயல்பானது, இயல்பற்றது, கடினமானது, உயிரற்றது என 4 வகைப்படுத்தி முடிவுகள் அறிவிக்கப்படும்.
இவற்றில் கடினவிதை என்பது விதை உறையின் கடினத்தன்மை காரணமாக நீர் உட்புக இயலாத காரணத்தினால் முளைவிடாமல் இருக்கும். பயறு விதைகள் மற்றும் வெண்டை விதைகளில் இவை தனியாக எடுத்து கணிக்கிடப்படும். இவைகள் வயல்களில் முளைப்பதற்கு சாத்தியக்கூறு உள்ளதால் முளைப்புதிறன் கணக்கிடும் போது இயல்பான விதைகளுடன் சேர்த்து கணக்கிடப்படும். இதனை நெல்லையிலுள்ள விதைப்பரிசோதனை அலுவலர் முகம்மதுகாசீம் தெரிவித்தார்.

## ஆத்தூரில் `1 கோடிக்கு மஞ்சள் ஏலம் பனங்காளி குவிண்டால் `13,059க்கு விற்பனை

பதிவு செய்த நேரம்:2012-09-10 10:48:27

ஆத்தூ ர், : ஆத்தூர் வேளாண் கூட்டுறவு சங்கத்தில் நடந்த ஏலத்தில் ஒரு குவிண்டால் பனங்காளி மஞ்சள் `13,059க்கு விலை போனது.
சேலம் மாவ ட்டம் ஆத்தூ ர் புதுப்பேட்டையில் கூட்டுறவு வேளாண் உற்பத்தியாளர்கள் விற்பனை சங்கம் உள்ளது. இந்த சங்கத்தில் பெரம்பலூர், விழுப்புரம், கடலூர், சேலம், நாமக்கல் மாவட்டத்தைச் சேர்ந்த விவசாயிகளால் கொண்டுவரப்படும் மஞ்சள் பருத்தி, மாக்காச்சோளம் மற்றும் எண்ணெய் வித்து பொருட்கள் வாரம்தோறும் ஏலம் மூலம் விற்பனை செய்யப்பட்டு வருகின்றது. மஞ்சள் ஏலம் வாரம் தோறும் சனிக்கிழமை மாலையில் நடைபெறுவது வழக்கம். நேற்று முன்தினம் நடைபெற்ற ஏலத்தில் விவசாயிகள் கொண்டுவந்த 2,520 மூட்டை மஞ்சளை ஈரோடு, சேலம், திருப்பூர் உள்ளிட்ட பகுதிகளில் இருந்து வந்த வியாபாரிகள் ஏலத்தில் எடுத்தனர். சுமார் `1 கோடிக்கு மஞ்சள் நேற்று முன்தினம் விற்பனையானது. இந்த ஏலத்தில் விரலி ரகம் குவிண்டால் ஒன்றுக்கு `4,940 முதல் `7,899 வரையும், உருண்டை ரகம் குவிண்டால் `4,519 முதல் `6,740 வரை விற்பனையானது. பனங்காளி குவிண்டால் `12,509 முதல் `13,059 வரை விற்பனையானது.

## கால்நடைகளுக்கான இலவச மூலிகை கண்காட்சி

பதிவு செய்த நேரம்:2012-09-10 09:59:55

ஈரோடு, : கவுந்தப்பாடி ஜெயம் பிராணி நல அறக்கட்டளை சார்பில் கால்நடைகளுக்கான இலவச மூலிகை செடிகள் கண்காட்சி கோபி யில் நடந்தது. முகாமிற்கு தொழில்நுட்ப ஆலோசகர் டாக்டர்

அருணாசலம் தலைமை வகித்தார்.
ஜெயம் பிராணி நல அறக்கட்டளை நிறுவனத்தலைவர் கே.வி.கோவிந்தராஜ் வரவேற்றார்.
இயற்கை வாழ்வியல் இயக்க தலைவர் டாக்டர் காசிபிச்சை குத்துவிளக்கேற்றினார். ஈரோடு ஆவின் முன்னாள் நிர்வாக இயக்குநர் லோகநாதன், கோபி மைராடா வேளாண் அறிவியல் நிலைய தொழில்நுட்ப அலுவலர் பச்சியப்பன், கோ விக்ஞான் அனுசந்தாதன் கேந்திராவின் மாநில அமைப்பாளர் கிருஷ்ணகுமார் முன்னிலை வகித்தனர்.
பார்த்தீனியத்தை இயற்கை உரமாக மாற்றுவது, இயற்கை விவசாய ஆலோசனைகள், பஞ்சகாவ்யா ஜீவாமிர்தம், மீன் அமிட்னா அமிலம், இயற்கை பூச்சி விரட்டிகள் போன்றவற்றின் செயல்முறை விளக்கங்கள் மற்றும் உபயோகிக்கும் முறைகள் குறித்தும் விளக்கம் அளிக்கப்பட்டது.
முகாமில், உலக மகளிர் உரிமைக்கழக உறுப்பினர் ஜெயலட்சுமி நன்றி கூறினார்.

## தூத்துக்குடி மாவட்டத்தில் நிலத்தடிநீர் கொள்ளையை தடுக்க வேண்டும் விவசாயிகள் சங்க மாநாட்டில் வலியுறுத்தல்

பதிவு செய்த நேரம்:2012-09-10 11:06:55

கோவில்பட்டி, : தூத்துக்குடி மாவட்டத்தில் நிலத்தடி நீர் கொள்ளையை தடுக்க வேண்டும் என கோவில்பட்டியில் நடந்த விவசாயிகள் சங்க மாவட்ட மாநாட்டில் வலியுறுத்தப்பட்டது.
கோவில்பட்டியில் தமிழ் நாடு விவசாயிகள் சங்கத் தின் தூத்துக்குடி மாவட்ட 21வது மாநாடு 2 நாள் நடந்தது.
மாநாட்டை முன்னிட்டு முதல்நாள் ஊர்வலம் நடந்தது.
கோவில்பட்டி ராமசாமிதாஸ் பூங்கா முன்பிருந்து துவங்கிய ஊர்வலம் மெயின்ரோடு வழியாக காந்தி மைதானத்தை அடைந்தது. தொடர்ந்து அங்கு நடந்த பொதுக்கூட்டத்திற்கு மாவட்ட தலைவர் ராகவன் தலைமை வகித்தார். மாநில பொதுசெயலாளர் சண்முகம், மாநில துணை செயலாளர் செல்லசுவாமி, மாவட்ட செய லாளர் பெருமாள், மாவட்ட துணை தலைவர் சீனிவாசன் பேசினர்.
நேற்று நடந்த 2வது நாள் நிகழ்ச்சியில் மாவட்ட பொருளாளர் சங்கரசுப்பு கொடியேற்றினார். மாவட்ட துணை தலைவர் கணபதி அஞ்சலி தீர்மானம் வாசித்தார். வரவேற்புகுழு செயலாளர் ராமசுப்பு வரவேற்றார். மாநில துணை செயலாளர் செல்லசுவாமி தலைமை வகித்தார். மாவட்ட செயலாளர் பெருமாள் அறிக்கை சமர்ப்பித்து பேசினார்.
மாநாட்டில், தூத்துக்குடி மாவட்டம் ஓட்டப்பிடாரம், திருச்செந்தூர், தூத்துக்குடி, ஆழ்வை,

ஸ்ரீவைகுண்டம் ஒன்றிய பகுதிகளில் நடக்கும் நிலத்தடி நீர் கொள்ளையை தடுக்க வேண்டும். விவசாயத்தை சீரழிக்கும் புதுக் கோட்டையை அருகே அமைந்துள்ள தனியார் ரசாயன தொழிற்சாலையை மூட வேண்டும். நிலமோச டிக்கு எதிராக உறுதியான நடவடிக்கை எடுக்க வேண் டும்.

தாமிரபரணி பாசனத் தை பாதுகாக்க வேண்டும். சிவகாசி அருகே முதலிபட்டி யில் நடந்த பட்டாசு ஆலை தீவிபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு உரிய நிவாரணம் வழங்க வேண்டும் என்பது உள் ளிட்ட பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

## கிராமசபை கூட்டம்

பதிவு செய்த நேரம்:2012-09-10 11:05:52

ஏரல், : ஏரல் அருகே சூழவாய்க்கால் பஞ்சாயத்து கிராமசபை கூட்டம் நடந்தது. பஞ். தலைவர் அனஸ் தலைமை வகித்தார். துணைத்தலைவர் சங்கரநாராயணன் முன்னிலை வகித் தார். இதில், மகாத்மாகாந்தி தேசிய ஊரக வேலை உறுதிதிட்டத்தின் கீழ் ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் சிறு, குறு விவசாயிகளின் நிலங்களை மேம்பாடு செய்தல் தொடர்பாக தாசில்தார் அலுவலகத்தில் பெறப்பட்ட நிலவுடமை பயனாளிகள் பட்டியல் களை கிராம சபை ஒப்பு தலுக்கு வைக்கப்பட்டு தீர் மானம் நிறைவேற்றப்பட் டது. வார்டு உறுப்பினர்கள் முத்தலிபு, மன்சுராபேகம், காசிநாராயணன், வேளாங்கண்ணி, உதவி வேளாண்மை அலுவலர்கள் நல்லதம்பி, மார்க்கண்டயன், தேசிய ஊரக வேலை உறுதிதிட்ட பயனாளிகள், பொதுமக்கள் கலந்து கொண்டனர். பஞ். செயலாளர் சுடலையாண்டி நன்றி கூறினார்.

## கடும் வறட்சி 5 ஏக்கர் நிலமிருந்தால் கடன் தள்ளுபடிவேண்டும் காங். விவசாய பிரிவு கோரிக்கை

பதிவு செய்த நேரம்:2012-09-10 11:01:23

திருச்சி, : ஐந்து ஏக்கருக்கு மேல் நிலமிருந்தால் விவசாய கடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என மத்திய நிதியமைச்சரிடம் விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

தமிழ்நாடு காங்கிரஸ் விவசாய பிரிவு மாநில துணை தலைவர் புலியூர் நாகராஜன், மத்தி நிதியமைச்சர் சிதம்பரத்திற்கு அனுப்பியுள்ள கோரிக்கை: மத்திய அரசு 2008ம் ஆண்டில் கடன் நிவாரண சட்டம் மூலம் 80ஆயிரம் கோடி விவசாய கடன் தள்ளுபடி செய்தது. அதில் 5 ஏக்கருக்கு உட்பட்டவர்களுக்கு முழுமையாகவும், 5 ஏக்கருக்கு மேல் உள்ளவர்களுக்கு 25 சதவீதமும் தள்ளுபடி செய்யப்பட்டது. அதில் 5 ஏக்கருக்கு மேல் உள்ள விவசாயிகள் தங்களுக்கும் முழுமையாக தள்ளுபடி செய்ய வேண்டும் என கடந்த 2008ம் ஆண்டு முதலே விவசாயி கள் கோரிக்கை விடுத்து வருகின்றனர். கடுமையான வறட்சியும், வெள்ள சேதமும் மறுபுறம் வாங்கிய

கடனை திரும்ப கட்ட முடியாத அவல நிலை மேலும் விவசாயத்தை தொடர முடியாத துன்பத்தில் ஆழ்ந்துள்ள விவசாயிகளின் துயரத்தை போக்குகின்ற வகையில் மத்திய அரசு 5 ஏக்கருக்கு மேல் உள்ள விவசாயிகள் பட்ட நடப்பு தேதி வரை உள்ள கடனை முழுமையாக ரத்து செய்து இந்திய விவசாயிகள் அனைவரும் கடனற்றவர்கள் என மத்திய அரசு அறிவித்து விவசாயிகளை காப்பாற்ற வேண்டும். இவ்வாறு அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தினத் தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்

**விவசாயிகளுக்கு நல்ல விலை கிடைக்கும் வரை விளை பொருட்களை பாதுகாக்க**
**ரூ.37½ கோடியில் 18 நவீன சேமி பு கிடங்குகள், 50 குளிர் பதன கிடங்குகள்**
**ஜெயலலிதா உத்தரவு**
சென்னை, செ .11–

விவசாயிகளுக்கு நல்ல விலை கிடைக்கும் வரை விளை பொருட்களை பாதுகா பாக இரு பில் வைக்க, ரூ.37½ கோடியில் 18 நவீன சேமி பு கிடங்குகள், 50 குளிர் பதன கிடங்குகள் அமைக்க முதல்–அமைச்சர் ஜெயலலிதா உத்தரவிட்டுள்ளார்.

இது தொடர்பாக, தமிழக அரசு நேற்று வெளியிட்டுள்ள செய்திக்குறி பில் கூற பட்டுள்ளதாவது–

ஆக்க பூர்வ நடவடிக்கை

பல்வேறு தொழில்களை புரிகின்ற மக்களின் பசியினை போக்கும் உன்னதத் தொழிலாம் உழவுத்தொழிலை ஊக்குவிக்கும் வகையிலும், அந்த தொழிலை மேற்கொ டு வரும் உழவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் வகையிலும் பல்வேறு ஆக்க பூர்வமான நடவடிக்கைகளை முதல்–அமைச்சர் ஜெயலலிதா எடுத்து வருகிறார்.

அந்த வகையில், விவசாயிகள் தங்களின் விளை பொருட்களை பாதுகா பாக இரு பில் வைத்து அவற்றிற்கு நல்ல விலை கிடைக்கும்போது விற்பனை செய் ம் வகையிலும், உழை பின் பலன் உழவர்களுக்கு முழுமையாக கிடைக்க வே டும் என்ற நோக்கத்துடனும், எடைபோடும் எந்திரங்கள், எடை மேடைகள், ஈர பதமானி போன்ற வசதிகளுடன் கூடிய 18 நவீன சேமி பு கிடங்குகள் மற்றும் 50 குளிர் பதன கிடங்குகள் ஆகியவற்றை 37 கோடியே 50 லட்சம் ரூபாய் செலவில் அமைக்க முதல்–அமைச்சர் ஜெயலலிதா உத்தரவிட்டுள்ளார்.

விவசாயிகள் அவதி

தமிழ்நாட்டில் உள்ள பெரும்பாலான சிறு மற்றும் குறு விவசாயிகள் பயிர்க் கடனை திரும்பிச் செலுத்த வே டும் என்ற எ ணத்திலும், விளைபொருட்களை ட நாட்கள் பாதுகா பாக வைத்திருக்க முடியாது என்பதாலும், அறுவடை முடிந்தவுடன் கிடைத்த விலைக்கு தங்கள் விளை பொருட்களை விற்றுவிடுகின்றனர். இதன் காரணமாக, தாங்கள் விளைவித்த விளைபொருட்களுக்கு நல்ல விலை கிடைக்காமல் விவசாயிகள் அவதி படுகின்றனர்.

இதன்படி, 2 ஆயிரம் மெட்ரிக் டன் கொள்ளளவு கொ ட 18 நவீன சேமி பு கிடங்குகள், ஒவ்வொன்றும் 1 கோடியே 20 லட்சம் ரூபாய் மதி பீட்டில், 21.60 கோடி ரூபாய் செலவில், திருவ ணாமலை விற்பனை குழுவின் ஆரணி மற்றும் தேசூர் ஒழுங்குமுறை விற்பனை கூடங்கள்; ஈரோடு விற்பனை குழுவின் வெள்ளக்கோவில், அலங்கியம் மற்றும் மூலனூர் ஒழுங்குமுறை விற்பனை கூடங்கள்; வேலூர் விற்பனை குழுவின் கலவை ஒழுங்குமுறை விற்பனை கூடம்; விழு புரம் விற்பனை குழுவின் அவலூர்பேட்டை மற்றும் தி டிவனம் ஒழுங்குமுறை விற்பனை கூடங்கள்; நாக பட்டினம் விற்பனை குழுவின், குத்தாலம் ஒழுங்குமுறை விற்பனை கூடம், ராமநாதபுரம் விற்பனை குழுவின் தேவக்கோட்டை ஒழுங்குமுறை விற்பனை கூடம், கோயம்புத்தூர் விற்பனை குழுவின் செஞ்சேரி மற்றும் ஆனைமலை ஒழுங்குமுறை விற்பனை கூடங்கள், தருமபுரி விற்பனை குழுவின் ஊத்தங்கரை ஒழுங்குமுறை விற்பனை கூடம், திருவாரூர் விற்பனை குழுவின் மன்னார்குடி ஒழுங்குமுறை விற்பனை கூடம், திருச்சி விற்பனை குழுவின் பெரம்பலூர் ஒழுங்குமுறை விற்பனை கூடம், கடலூர் விற்பனை

குழுவின் காட்டுமன்னார்கோவில் மற்றும் குறிஞ்சி பாடி ஒழுங்குமுறை விற்பனை கூடங்கள் ஆகிய 18 இடங்களில் ஊரக சேமி பு கிடங்குகள் கட்டுவதற்கு முதல்–அமைச்சர் ஜெயலலிதா உத்தரவிட்டுள்ளார்.

குளிர் பதன கிடங்குகள்

இதே போன்று, 25 மெட்ரிக் டன் கொள்ளளவில், குளிர் பதன கிடங்கு ஒன்றிற்கு 31 லட்சத்து 80 ஆயிரம் ரூபாய் வீதத்தில், 15 கோடியே 90 லட்சம் ரூபாய் செலவில், திருவ ணாமலை விற்பனை குழுவின் செங்கம், போளூர், திருவ ணாமலை ஒழுங்குமுறை விற்பனை கூடங்கள், கடலூர் விற்பனை குழுவின் கடலூர் விற்பனை கூடம், ஈரோடு விற்பனை குழுவின், சத்தியமங்கலம், கொடுமுடி, அந்தியூர், பூஞ்சம்புளியம்பட்டி ஒழுங்குமுறை விற்பனை கூடங்கள், வேலூர் விற்பனை குழுவின், வேலூர், திரு பத்தூர் மற்றும் வாணியம்பாடி ஒழுங்குமுறை விற்பனை கூடங்கள், திருச்சி விற்பனை குழுவின் பெரம்பலூர் மற்றும் கரூர் ஒழுங்குமுறை விற்பனை கூடங்கள், கோயம்புத்தூர் விற்பனை குழுவின் செஞ்சேரி, ஆனைமலை, அவினாசி, அன்னூர், தொ டமுத்தூர் மற்றும் உடுமலை பேட்டை ஒழுங்குமுறை விற்பனை கூடங்கள், விழு புரம் விற்பனை குழுவின் விழு புரம் மற்றும் உளுந்தூர்பேட்டை ஒழுங்குமுறை விற்பனை கூடங்கள், தருமபுரி விற்பனை குழுவின் அரூர், பென்னாகரம், போச்சம்பள்ளி மற்றும் ஊத்தங்கரை ஒழுங்குமுறை விற்பனை கூடங்கள், ராமநாதபுரம் விற்பனை குழுவின், ராஜபாளையம், அரு புக்கோட்டை, சிங்கம்புனேரி மற்றும் கமுதி ஒழுங்குமுறை விற்பனை கூடங்கள்,

சேலம் விற்பனை குழுவின் ஆத்தூர், நாமகிரி பேட்டை, திருச்செங்கோடு, பரமத்தி வேலூர், கெங்கவல்லி மற்றும் சேலம் ஒழுங்குமுறை விற்பனை கூடங்கள், தி டுக்கல் விற்பனை குழுவின் பழனி, தி டுக்கல் மற்றும் கோபால்பட்டி ஒழுங்குமுறை விற்பனை கூடங்கள், கன்னியாகுமரி விற்பனை குழுவின் திங்கள்சந்தை ஒழுங்குமுறை விற்பனை கூடம், தஞ்சாவூர் விற்பனை குழுவின் தஞ்சாவூர் ஒழுங்குமுறை விற்பனை கூடம், தேனி விற்பனை குழுவின் தேனி மற்றும் கம்பம் ஒழுங்குமுறை விற்பனை கூடங்கள், மதுரை விற்பனை குழுவின் திருமங்கலம் ஒழுங்குமுறை விற்பனை கூடம், திருநெல்வேலி விற்பனை குழுவின், தூத்துக்குடி, திருநெல்வேலி, வள்ளியூர், கோவில்பட்டி, எட்டயபுரம், தென்காசி ஒழுங்குமுறை விற்பனை கூடங்கள் மற்றும் புதுக்கோட்டை விற்பனை குழுவின், ஆலங்குடி ஒழுங்குமுறை விற்பனை கூடம் ஆகிய 50 இடங்களில் குளிர்பதன கிடங்குகள் அமைக்க முதல்–அமைச்சர் ஜெயலலிதா உத்தரவிட்டுள்ளார்.

தேசிய உணவு பத படுத்தும் இயக்கம்

மேலும், உணவு பத படுத்துவதன் முக்கியத்துவத்தை அறி ம் வ ணம் உற்பத்தியை பெருக்கி, நாட்டில் உள்ள விவசாயிகளின் வருமானத்தை அதிகரித்தல்; மாநிலத்தின் வேளா திட்டங்களுக்கும், உணவு பத படுத்தும் தொழில் பிரிவின் வளர்ச்சிக்கும் உதவிடுதல்; மாநில அரசு நிறுவனங்களுக்கும், மதி பு கூட்டுதலுக்கான உட்கட்டமை புகளுக்கும் உள்ள இடைவெளியை குறை பதன் மூலம் வேளா விளைபொருட்களின் தேவையை அதிகரித்தல்; அறுவடை பின்செய் தொழில்நுட்ப மேலா மற்றும் உணவு பத படுத்தும் தொழில்களில் தொழில் முனைவோருக்கு பயிற்சி அளித்து அவர்களின் தரத்தை மேம்படுத்துதல், உணவு பத படுத்தும் தொழிற்சாலைக்கு உள்நாடு மற்றும் வெளிநாட்டு சந்தைக்கேற்ப, உணவு பாதுகா பு சட்டத்தின் தரத்திற்கும், சந்தை தேவைக்கும் உதவி செய்தல் போன்ற நோக்கங்களின் அடி படையில் தமிழகத்தில் 2012–2013–ம் ஆ டு முதல், தேசிய உணவு பத படுத்தும் இயக்கத்தினை செயல்படுத்த முதல்–அமைச்சர் ஜெயலலிதா உத்தரவிட்டுள்ளார்.

இந்த இயக்கத்தின் திட்டங்களை தமிழ்நாட்டில் செயல்படுத்த, வேளா விற்பனை மற்றும் வேளா வணிகத்துறை, மாநில ஒருங்கிணை பு முகமையாக செயல்படுவதற்கும், அத்துறையின் ஆணையரை இந்த தேசிய உணவு பத படுத்தும் இயக்கத்தின் இயக்குனராக நியமனம் செய்வதற்கும் முதல்–அமைச்சர் ஜெயலலிதா உத்தரவிட்டுள்ளார்.

குழுக்கள் அமைக்க படும்

மேலும், இந்த இயக்கத்தின் நிர்வாகத்தை வலு படுத்துதல், தொலை நோக்கு திட்டத்தினை தயாரித்தல் மற்றும் இந்த இயக்கம் பற்றி மக்களிடையே விழி புணர்வு ஏற்படுத்துதல் போன்ற பணிகளுக்காக செலவிட படும் 1 கோடியே 50 லட்சம் ரூபாயில், மாநில அரசின் பங்களி பான 37.50 லட்சம் ரூபாயை வழங்க முதல்–அமைச்சர் ஜெயலலிதா உத்தரவிட்டுள்ளார்.

இந்த இயக்கத்தின் திட்டங்களை செயல்படுத்த, மாநில மற்றும் மாவட்ட அளவிலான பொதுக்குழு, மாநில அளவில் அதிகாரம் பெற்ற குழு, திட்ட கூர்ந்தாய்வு குழு, திட்ட ஒ புதல் குழு மற்றும் மாவட்ட உணவு பத படுத்தும் இயக்க குழு ஆகிய குழுக்கள் அமைக்க படும்.

இவ்வாறு அரசு செய்திக்குறி பில் கூற பட்டுள்ளது.

**20–ந்தேதி வரை நாள்தோறும்**
**காவிரியில், வினாடிக்கு 10 ஆயிரம் கன அடி த ணீர் திற பு**
**சு ரீம் கோர்ட்டில் கர்நாடக அரசு சம்மதம்**
புதுடெல்லி, செ .11–

20–ந் தேதி வரை, காவிரியில் நாள்தோறும் வினாடிக்கு 10 ஆயிரம் கன அடி த ணீர் திறந்து விடுவதற்கு, சு ரீம் கோர்ட்டில் கர்நாடக மாநில அரசு சம்மதம் தெரிவித்து உள்ளது.

நதி ர் ஆணையத்தை கூட்ட...

காவிரி நடுவர் மன்ற இடைக்கால உத்தரவு படி த ணீர் திறந்து விட கர்நாடக அரசு தொடர்ந்து மறுத்து வருகிறது.

அதைத் தொடர்ந்து, “தமிழ்நாட்டில் காவிரி டெல்டா பகுதியில் குறுவை–சம்பா நெல் சாகுபடிக்காக, வழக்கம்போல் ஜூன் 12–ந் தேதி அன்று மேட்டூர் அணையை திறக்க முடியவில்லை. எனவே, காவிரி நதி ர் ஆணையத்தை கூட்ட வே டும்” என்று, தமிழக அரசு சார்பில் சு ரீம் கோர்ட்டில் மனு தாக்கல் செய்ய பட்டது.

தமிழக அரசு புதிய மனு

இந்த வழக்கு கடந்த 3–ந் தேதி விசாரணைக்கு வந்ததை அடுத்து, செ டம்பர் 19–ந் தேதி அன்று, பிரதமர் மன்மோகன்சிங் தலைமையிலான காவிரி நதி ர் ஆணையம் கூட்ட படும் என்று, மத்திய அரசு அறிவித்தது.

அதுவரை தற்போது சாகுபடி செய்ய பட்டுள்ள சம்பா பயிரை கா பாற்றுவதற்காக, கர்நாடக அரசு தமிழகத்துக்கு தினமும் 2 டி.எம்.சி. த ணீரை திறந்துவிட உத்தரவிட வே டும் என்று, தமிழக அரசு புதிய மனுவை தாக்கல் செய்தது.

கடந்த வெள்ளிக்கிழமை அன்று இந்த மனு மீது விசாரணை நடத்திய சு ரீம் கோர்ட்டு திபதிகள், கர்நாடகத்தில் பில்லிக்கு டில் இருந்து தமிழகத்துக்கு வறட்சிக்காலத்தில் இதுவரை திறந்து விட பட்ட த ணீரின் அளவு பற்றிய அறிக்கையை திங்கட்கிழமைக்குள் (நேற்று) தாக்கல் செய்ய வே டும் என்று உத்தரவிட்டனர்.

10 ஆயிரம் கன அடி த ணீர்

தமிழக அரசின் மனு, திபதிகள் டி.கே.ஜெயின், மதன் லோகூர் ஆகியோரைக் கொ ட சு ரீம் கோர்ட்டு பெஞ்ச் முன்பு நேற்று மீ டும் விசாரணைக்கு வந்தது.

அ போது நல்லெ ணத்தின் அடி படையில், தமிழ்நாட்டிற்கு வருகிற 20–ந் தேதி வரை நாள்தோறும் வினாடிக்கு 10 ஆயிரம் கன அடி த ணீர் திறந்துவிட கர்நாடக அரசு சம்மதம் தெரிவித்து இருந்த தகவல் கோர்ட்டில் தெரிவிக்க பட்டது.

திபதிகள் நம்பிக்கை

இரு தர பு வாதங்களை ம் கேட்ட திபதிகள், கர்நாடக அரசு த ணீர் திறந்துவிட சம்மதம் தெரிவித்து இரு பதால், 2 டி.எம்.சி. த ணீர் திறந்துவிட உத்தரவிட வே டும் என்ற தமிழக அரசின் கோரிக்கையை ஏற்க மறுத்துவிட்டனர்.

19–ந் தேதி அன்று பிரதமர் தலைமையில் நடைபெறும் காவிரி நதி ர் ஆணைய கூட்டத்தில் இந்த பிரச்சினைக்கு சுமுக தீர்வு காண படும் என்றும் திபதிகள் நம்பிக்கை தெரிவித்தனர்.

இடைக்கால ஏற்பாடு

அதே நேரத்தில், "20–ந்தேதி வரையிலான இடைக்கால ஏற்பாடுதான் இது" என்று தெளிவுபடுத்திய திபதிகள், மத்திய நதி ர் ஆணையம் கூட்ட படவிட்டாலோ அல்லது கூடி ம் பிரச்சினைக்கு தீர்வு காணமுடியாவிட்டாலோ, இரு மாநில அரசுகளும் சு ரீம் கோர்ட்டில் உரிய மேல் நடவடிக்கை மேற்கொள்ளலாம் என்றும், திபதிகள் அனுமதி வழங்கினார்கள்.

தமிழக அரசு சார்பில் 2 டி.எம்.சி. த ணீர் திறந்துவிட வலி றுத்த பட்டது. ஆனால், வினாடிக்கு 10 ஆயிரம் கன அடி வீதம் த ணீர் திறந்து விட கர்நாடக அரசு தற்போது சம்மதம் தெரிவித்து இருக்கிறது. ஆனால், இந்த த ணீர் அளவை கணக்கிட்டால் 1 டி.எம்.சி.க்கும் குறைவானது என்பது குறி பிடத்தக்கது.

மத்திய அரசுக்கு க டனம்

நேற்றைய விசாரணையின்போது மத்திய அரசு சார்பில் வக்கீல்கள் யாரும் ஆஜர் ஆகாததற்கு திபதிகள் கடும் க டனம் தெரிவித்தனர். "நாங்கள் எதுவும் சொன்னால் அவர்களுக்கு (மத்திய அரசு) வருத்தம் ஏற்படுகிறது. ஆனால், இந்த விசாரணைக்கு அவர்கள் வரவில்லை" என்று திபதிகள் குறி பிட்டனர்.

இதேபோல் கடந்த 3–ந் தேதி அன்று நடைபெற்ற விசாரணையின் போதும், காவிரி நதி ர் ஆணையத்தை கூட்டுவதற்கு ஏற்பாடு செய்யாத பிரதமர் அலுவலகத்திற்கு திபதிகள் கடும் க டனம் தெரிவித்து இருந்தனர்.

பிரதமர் மன்மோகன்சிங் தலைமையிலான காவிரி நதி ர் ஆணையத்தில், தமிழ்நாடு, கர்நாடகம், கேரளா மற்றும் புதுச்சேரி மாநிலங்களின் முதல்–மந்திரிகள் உறு பினர்களாக உள்ளனர்.

**பாளையங்கால்வாயில்**
**த ணீர் திறந்து விடவே டும்**
**கருகிய வாழைகளுடன் வந்து விவசாயிகள் மனு**
நெல்லை, செ .11–

பாளையங்கால்வாயில் த ணீர் திறந்து விடகோரி, நெல்லை கலெக்டர் அலுவலகத்துக்கு கருகிய வாழைகளுடன் வந்த விவசாயிகள் மனு கொடுத்தனர்.

குறைதீர்க்கும் நாள் கூட்டம்

நெல்லை மாவட்ட மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் கலெக்டர் அலுவலக வளர்ச்சி மன்ற கூட்ட அரங்கில் நேற்று நடந்தது. மாவட்ட வருவாய் அலுவலர் உமாமகேசுவரி தலைமை தாங்கி பொது மக்களிடம் கோரிக்கை மனுக்களை வாங்கினார்.

இந்த கூட்டத்துக்கு வந்த ஏராளமான பெ கள், தங்களுக்கு முதியோர் உதவித்தொகை கேட்டு மனு கொடுத்தனர். அதில் பலர், தங்களுக்கு தகுதி இருந்தும் சில கிராமநிர்வாக அதிகாரிகள் தரமறுக்கிறார்கள் என்று கூறியிருந்தனர்.

கருகிய வாழைகளுடன்

நெல்லை அருகே உள்ள கோபாலசமுத்திரத்தை சேர்ந்த விவசாயிகள், பாரதீய ஜனதா ஒன்றிய அமை பாளர் ச முகவேலு தலைமையில் கருகிய வாழைகளுடன் கலெக்டர் அலுவலகத்துக்கு வந்து மனு கொடுத்தனர்.

அந்த மனுவில், பாளையங் கால்வாயில் த ணீர் திறந்து விடாததால் வாழை பயிர்கள் கருகி விட்டன. மேலும் கால்வாயில் அமலை செடிகள் அதிகரித்து உள்ளது. இதை அகற்றி த ணீர் திறந்து விடவே டும். கன்னடியன் கால்வாய் பகுதியில் உள்ள குளங்கள் நிறையவில்லை. எனவே கன்னடியன் கால்வாயில் கூடுதலாக த ணீர் திறந்துவிட வே டும். என்று கூறி உள்ளனர்.

சாலையை சீரமைக்க

மனிதநேய மக்கள் கட்சியினர் மாவட்ட தலைவர் மைதீன்பாரூக், செயலாளர் ரசூல்மைதீன், த.மு.மு.க. மாவட்ட செயலாளர் காசீம்பிர்தவுசி ஆகியோர் தலைமையில் வந்தவர்கள் கொடுத்த மனுவில், நெல்லை டவுனில் இருந்து திருவேங்கடநாதபுரம் செல்லும் சாலை 10 வருடங்களாக மாநகராட்சி, ஊராட்சி எல்லை பிரச்சினையால் சீரமைக்க படாமல் மோசமான நிலையில் உள்ளது. இதனால் பல விபத்துகள் ஏற்பட்டு உள்ளது. திருவேங்கடநாதபுரத்தில் கோவில் திருவிழா நடைபெற உள்ளது எனவே போர்க்கால அடி படையில் அந்த சாலையை உடனே சீரமைக்கவே டும் என்று கூறி உள்ளனர்.

துணைசுகாதார நிலையம்

சுத்தமல்லி பாரதியார்நகரில் உள்ள துணை சுகாதார நிலையம் தினசரி இயங்கவே டும் என்று கூறி பொதுநலச்சங்க தலைவர் பரமசிவன், செயலாளர் முருகன் ஆகியோர் தலைமையில் ஊர் மக்கள் மனு கொடுத்தனர்.

ஆலங்குளம் 15–வது வார்டு சி.எஸ்.ஐ. சர்ச் தெருவில் பழைய பிளாஸ்டிக் பொருட்கள் உருக்குவதை தடைசெய்யவே டும் என்று கூறி அந்த பகுதி பெ கள் 100–க்கும் மேற்பட்டவர்கள் மார்க்சிஸ்டு

லெனினிஸ்டு விடுதலை கட்சி மாவட்ட குழு உறு பினர் கணேசன் தலைமையில் கலெக்டர் அலுவலகத்தில் மனு கொடுத்தனர்.

குடி ர் தொட்டி

அ.தி.மு.க. மகளிர் அணி துணை செயலாளர் கலா கொடுத்துள்ள மனுவில், கடையநல்லூர் யூனியன் குலயனேரி பஞ்சாயத்து ரெட்டைகுளத்தில் சட்டமன்ற உறு பினர் மேம்பாட்டு நிதியில் கட்ட பட்டுள்ள குடி ர்தொட்டி சரியான முறையில் கட்ட படவில்லை. த ணீர் ஏற்றியவுடன் தொட்டியில் கசிவு ஏற்படுகிறது. அதிக அளவில் த ணீர் ஏற்றினால் தொட்டி உடை ம் நிலையில் உள்ளது எனவே தொட்டியை ஆய்வு செய்து சரிசெய்ய நடவடிக்கை எடுக்கவே டும் என்று கூறி ள்ளார்.

கூடங்குளம் விவகாரம்

கூடங்குளம் பகுதியில் போட பட்டுள்ள 144 தடை உத்தரவை உடனே வாபஸ் பெறவே டும். அணுஉலையில் ரேனியம் நிர புவதை நிறுத்தவே டும். என்று பாட்டாளிமக்கள் கட்சி துணை பொதுச்செயலாளர் அ.வியனரசு, மே 17 இயக்க லெனாகுமார் மற்றும் நெல்லை மாவட்ட தமிழ் எழுத்தாளர்கள்– கல்வியாளர்கள் கூட்டமை பு சமூக அரசியல் இயக்கங்கள் கட்சிகளின் கூட்டமை பினர் கலெக்டர் அலுவலகத்தில் மனு கொடுத்தனர்.

**மரக்காணம் பகுதியில் கிராம சபை கூட்டம்**
மரக்காணம், செ .11–

மரக்காணம் பகுதியில் கிராம சபை கூட்டம் நேற்று நடந்தது.

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை வாய் பு திட்டத்தின் கீழ் விழு புரம் மாவட்டம் மரக்காணம் பகுதியில் கிராம சபை கூட்டம் நேற்று நடந்தது.

அனுமந்தை

அதன்படி அனுமந்தை ஊராட்சியில் நடந்த கிராம சபை கூட்டத்துக்கு அதன் தலைவர் கலைவாணி ராஜேந்திரன் தலைமை தாங்கினார். துணைத்தலைவர் சிவகாமி ராஜேந்திரன் முன்னிலை வகித்தார்.

கூட்டத்தில், ஒன்றிய கவுன்சிலர் சுமதி வெங்கடேசன், வார்டு உறு பினர்கள், வேளா மை உதவி அலுவலர் சுந்தரலிங்கம், ஊராட்சி செயலாளர் ஜெயமூர்த்தி உள்பட பலர் கலந்து கொ டனர்.

செய்யாங்கு பம்

செய்யாங்கு பம் ஊராட்சியில் நடந்த கிராம சபை கூட்டத்துக்கு அதன் தலைவர் பிரிமிநாதன் தலைமை தாங்கினார். துணைத்தலைவர் கஸ்தூரி, ஊராட்சி செயலர் ஜெயக்குமார், வார்டு உறு பினர்கள் கலந்து கொ டனர்.

கூனிமேடு ஊராட்சியில் நடந்த கிராம சபை கூட்டத்துக்கு ஊராட்சி மன்ற தலைவர் ஷாபுதீன் தலைமை தாங்கினார். துணைத்தலைவர் முபாரக், கவுன்சிலர் பா டுரங்கன், வார்டு உறு பினர்கள், ஊராட்சி செயலர் மேகநாதன் ஆகியோர் கலந்து கொ டனர்.

இதேபோல் கீழ் பேட்டை ஊராட்சியில் கிராம சபை கூட்டம் நடந்தது. கூட்டத்துக்கு ஊராட்சி மன்ற தலைவர் சீனிவாசன் தலைமை தாங்கினார். துணைத்தலைவர் ஜீவா, வார்டு உறு பினர்கள்,

வேளா  துறை உதவி அலுவலர் சுந்தரலிங்கம், ஒன்றிய பற்றாளர் அருள் அரசி, ஊராட்சி செயலர் ராஜேந்திரன் உள்பட பலர் கலந்து கொ  டனர்.

நடுக்கு பம்

நடுக்கு பம் ஊரட்சியில் அதன் தலைவர் மோகனசுந்தரம் தலைமையில் கிராம சபை கூட்டம் நடந்தது. துணைத்தலைவர் ரகுராமன், வார்டு உறு பினர்கள் கல்வி பழனி, வெங்கடேசன், அரிதாஸ், ரமேஷ், பாலசுந்தரம், ஜெயராணிபிரபு, முருகையன், சின்னபொன்னு ராஜாங்கம், ஊராட்சி செயலர் சித்ரா, பற்றாளர் வைத்தியநாதன் உள்பட பலர் கலந்து கொ  டனர்.

கந்தாடு ஊராட்சியில் கிராம சபை கூட்டம் நடந்தது. கூட்டத்துக்கு ஊராட்சி மன்ற தலைவர் தேவிபரசுராமன் தலைமை தாங்கினார். துணைத்தலைவர் முனியன், வார்டு உறு பினர்கள், ஊராட்சி செயலர் ரவி உள்பட பலர் கலந்து கொ  டனர்.

எம்.புது பாக்கம்

எம்.புது பாக்கம் ஊராட்சியில் நடந்த கிராம சபை கூட்டத்துக்கு அதன் தலைவர் தயாளன் தலைமை தாங்கினார். துணைத்தலைவர் சிவகுமார், ஒன்றிய கவுன்சிலர் சேது, ஒன்றிய பற்றாளர் சக்திவேல் ஆகியோர் கலந்து கொ  டனர்.

அனைத்து கிராம சபை கூட்டங்களிலும் சிறு, குறு விவசாயிகளின் நிலம் மேம்பாடு செய்வது குறித்து தீர்மானம் நிறைவேற்ற பட்டது. மேலும் கூட்டங்களில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை வாய் பு திட்டத்தில் பயன்படுத்த படும் தினக்கூலி ஊழியர்களிடம் மனுக்கள் பெற பட்டன.